உ

கடவுள்துணை.

நீதி நூல்.

தஞ்சாவூர்ச்சில்லா

மாயூரந் தாலூக்கா

முன்சிப்

மகாதனந்தங்கிய, ம-ா-ா-ஸ்ரீ

ச. வேதநாயகம்பிள்ளையவர்களா

லியற்றியதை,

மதுரைமாநகரம்.

ஆ. கந்தசாமிபிள்ளையவர்களாற்

பார்வையிட்டு.

காரைக்கால்பதிப்புக்கிணங்க

மு. கிருஷ்ணப்பிள்ளையவர்களால்

சென்னை.

பிடாரித்தாங்கல்,

நாராயணசாமிமுதலியார்குமாரர்

சி. தம்பரமுதலியாரவர்களது

வித்தியாரத்நாகரஅச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1907.

கடவுள் துணை.

சாற்றுக்கவிகள்.

ம-ா-ா-ஸ்ரீ,

திரிசிரபுரம்-மகாவித்வான்

மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்களியற்றியது.

ஆசிரியப்பா.

மலர்தலையுலகி னலர்பலவுயிரு
மறமுதலொருநாற் றிறமுமெளிதடையத்
தெய்வமுண்டென்று தெளிதான்முன்வைத்
தஃதுணர்ந்தார்க்கே யத்தேவியல்பும்
வாழ்த்துமுணர்ந்தியற்ற மனமுறுமாதலி
னதுபின்னுறவமைத் தரசர்தநீதி
தெய்வநீதியே சிவனுமாதலிற்
பின்னதுநிறுவிப் பெரும்பூம்பால
ரியல்பொடுபிரியா தியலுந்தன்மையிற்
குடிகளதியல்பு குறித்ததன்பின்னமைந்
தியல்புறத்தழீஇய விருங்குடிக்கல்லது
ஞானாசாரிய னண்ணுதலி
னனையவன்பெருமை யனையதன்பின்னமைந்
தியலாசிரிய னியலுணர்ந்தார்க்கே
பொய்யாசிரியன் புன்மைதோன்று
மாதலினவனிய லதன்பின்னுறநிறீஇ
யாரியனியல்போர்ந் தடுப்பார்க்கன்றித்
தந்தைதாய்வணக்கந் தகாமையினஃததன்

பின்னுறநிறுவிப் பெற்றியின்வணங்கு
மைந்தருக்கனையார் மகிழ்ந்தாற்றுதலிவை
யென்றுனாற்கற்பித் திடுதல்வளர்த்தான்
மற்றதன்பின்வைத் துற்றுழியுதவல்
கல்வியோயாதலிற் காமருமாதரு
முணருமாறதன்பின் னுறவஃதுறுத்திக்
கற்றோர்க்கன்றி மற்றோர்க்கியலா
தென்பதுதோன்ற விருஞ்சகோதரரியல்
பன்புறவதன்பி னமைதரநாட்டி
யுடன்பிறந்தாரொழுக் குறுமில்லறத்திற்
கின்றியமையா தென்பதுதோன்றக்
கிழவன்கிழத்தி யியலதன்பின்வைத்
தியலுறுகிழத்தி யியலுணர்ந்தார்க்கே
யவண்மறுதலையா மணங்கினடையுணர
வருமதனாலது மற்றதன்பின்வைத்
திவ்வாறொழுகு மியல்புடையுயர்ந்தோர்
தாழ்ந்தோர்த்தாங்கலுந் தாழ்ந்தோருயர்
கடங்கியொழுகலு மறனெனவதன்பின்
னொன்றன்பின்ன ரொன்றுறநிறுவி
யடங்கியொழுகுநர்க் ககலும்பொய்மை
பொய்நின்றகலப் போமேகளவும்
களவுநீங்கக் கைவிடுகொலையுங்
கொலையதுதொலையக் குலைதருமதுவு
மதுக்குடியகல மாறுஞ்சூதுஞ்
சூதுநீங்கப்பரி தானந்தொலையும்
பரிதானமகலப் படுபுறங்கூறலும்
புறங்கூறலொழியப் போம்பெரியோரைத்
தூற்றலுமஃதறத் தொலையுமுலோபமு
முலோபநீங்க வொழியுஞ்சோம்பலுஞ்
சோம்பநீங்கத் தொலைதருஞ்சினமுஞ்

சினமதுதீரச் சிதையும்பொறாமையு
மென்பதுதோன்ற விவையெலாமதன்பி
னொன்றன்பின்ன ரொன்றுறவமைத்துப்
பொறாமையொழிந்த புண்ணியர்க்கல்லது
கல்விச்செருக்குங் காரிகைச்செருக்குஞ்
செல்வச்செருக்குஞ் சேராவென்பதற்
கதன்பினவ்வொன்று வடைவுறநிறுவிச்
செருக்கொழிந்தவரே தீயவைச்சேரா
ரென்பதுதோன்ற வதன்பினிணைத்துத்
தீச்சார்பிலார்க்கே செறிபிழைபொறுத்த
லினியசொற்கழற லியலும்பிறர்க்குத்
தீங்குசெய்யாறை செறியுமென்றதன்பின்
முறையரோவென்று முயங்குறவைத்து
நினையுமிந்நெறியோர் நெடுந்துயிறுறப்ப
ருரைக்குமதற்பே ருண்டியுமொழியும்
புகலஃதறத்தற் புகழ்தலுமொழியு
மிஃதறுதெனிற்புக ழிகழ்மதியாமை
யுண்டாமென்றற் கொன்றன்பின்ன
ரொன்றுறவதன்பி னுறுமுறைநாட்டிப்
புகழிகழ்மதிக்கும் புண்ணியர்தமக்கே
பரோபகாரம் பலிக்குமென்றுணர
வதன்பினிறுவி யத்தகையோரே
பொருளவாவெழிவறப் புண்ணியர்தமக்கே
மெய்நிலையாமையும் வெளிப்படுமவற்கே
துன்பப்பகுதியுந் தோன்றிடுமவர்க்கே
யறஞ்செயுந்திறமுண் டாமவர்தாமே
கணிகையரியல்பு கழிப்பரென்றுணர
வினைமுறையதன்பி னியைதரநாட்டிக்
கரைதருமினையர் கமுகந்தோட்ட
மென்றுற்போல வியல்விலங்கினத்துக்

இடர்செயாரெனப்பி னிவைதரவமைத்து
நன்னெறிபலவு ணவிலாடதங்கப்
பன்னெறியென்பது கடையுறப்பதித்து
நீதிநூலென்னோர் நிலவுபெயரிட்டுத்
திருமாறந்த தெள்ளமுதொப்ப
யாவருமுவப்ப வினிதினியற்றித்
தந்தனனொருநா றவலருங்கேண்மைமற்
றன்னவன்யாரென் னறைகுதுங்கேண்மோ
புலிக்கொடிகயற்கொடி பொருவிற்கொடியுடை
வேந்தர்நாட்டுறை வேளாண்மாக்கள்
சோழியரென்றும் பாண்டியரென்றுங்
கொங்கரென்றும்பெயர் பெற்றனரவருள்
வளமெறும்பீசர் மலைக்குமேற்குக்
கடும்புனல்பாய்மதிற் கரைக்குக்கிழக்கு
நலந்தருகாவிரி நதிக்குத்தெற்கு
வளம்பொலிநம்பிரான் மலைக்குவடக்கு
நவிலுமிவ்வெல்லை நான்கனுட்பட்ட
விடங்குடிகொண்ட வியல்வேளாளர்
முன்னமுரைத்த முத்தமிழ்வேந்தரு
மெங்கண்மூவருக்கு மியன்முடிசூட்டுதற்
குங்கலையமைத்தன முவந்துகொள்வீரெனக்
கொண்டுமகிழ்ந்தனையார் கோத்தன்மையரே
யாயினரதனு லவர்வாழ்நாடு
கோனாடென்றோர் குலவுபெயர்பெற்ற
துறைக்கருங்குன்ற மொருபதினெட்டு
நத்தமெழுநூற் றறுபத்தாறு
முன்னும்படிநன் குளகுளக்காடு
முன்னுமாயிரத்து முந்நூற்றுமுப்பது
தேவாலயங்கள் சிறக்குநூற்றெட்டு
மிரும்பிரமாலய மிருபத்தெட்டுங்

குறையறக்கொண்டவக் கோனாடுபின்ன
ரறைதருபுனல்வேள் ளாற்றின்பென்பா
லுளதென்கோனா டொலியூர்க்கூற்றந்
திரைகரையெறியுமத் திருநதிவடபா
லொளிர்வடகோனா டுறையூர்க்கூற்ற
மெனப்பெயர்பெற்றுநன் றியங்குங்காலம்
வண்மையவ்வேளாண் மாக்சன்மிகப்பெருகி
வடகோனாட்டில் வண்குளத்தூரிற்
தெருதிருதலின்மிகப் பெரியசோனாடென்
றொருபெயர்பெற்றவவ் வொண்குளத்தூறரி
கொங்குராயர் சோத்திரமதனில்
வந்தவதரித்த செந்தமிழ்க்குரிசி
விரும்புவியேத்து மிளையான்குடியி
லருமுளைவாரி யன்னம்படைத்த
குருமணிமாறனங் குலமெனுங்சொண்ட
லவிர்விரையாச்சிலை யாண்டார்திருமலை
யுடையான்கருவாரா லுகளரியாற்றான்
குளிர்புனல்வயலொருங் குலவுகோனா
னமரும்புகழ்வே ளாண்குளத்தூரா
னுச்சைச்சிரவ முறழும்பரியா
னயிராவதநிக ராயதிண்களிற்றான்
குளிர்மதுப்பொழியங் குவளைமாவிகையா
னுலகமூன்று முணர்கொடைமுரசான்
வெற்றிக்கொடியெனு மேழிக்கொடியா
னடங்கலர்நடுங்க வடக்குமானையா
னளவில்பன்னூலு மரிறபவுணர்ந்தோன்
பண்பெலாமோருருப் படைத்தெனப்பொலிவோ
னாருணிநீர்நிறைந் தற்றேயுலகவாம்
பேரறிவாளன் றிருவெனப்பெரியோ
ருரைத்தவாக்கியத்திற் கொருசான்றாகப்

பயன்படுசெல்வம் படைத்துமகிழ்பூமா
னடைந்தோர்வெங்கலி யடர்க்குந்திறலோன்
பிறர்மனைநோக்காப் பேரறிவாளன்
கற்றோர்நட்புக் கழலாக்கனவா
ஞனிலமுவப்ப நடத்துநீதியா
னரும்பொருள்செறியு மைந்திணைக்கோவை
நம்பாற்கேட்ட நகுபுகழ்ப்பெரியோன்
வலந்தரு நதிக்குலவள்ள
னவந்தருவேத நாயகமாலே

விருத்தம்.

தெரியவிருவேறுலகத்தியற்கைதிருவேறுதெள்ளியரா
தலும்வேறென்றுள்ளபடியுரைத்த, வரியபுகழ்வள்ளுவர்தம்
வார்த்தையினைமறுத்தானரசர்காரியநடவு மதிகாரத்தோடு
னு, லரியவெனவுணர்ந்துபெருஞ் செல்வமுங் கல்வியுமிக்
கொருங்கடைந்துபொருட் கொடையிலொப்பிலானாகி, வி
ரியவனிமகிழவொருநீதிநூலியற்றிவிளக்கியசீர்வேதநாயகக்
குரிசிலானே. (உ)

வள்ளுவராதியரோநன்னீதிநூலுரைப்பதற்குவல்லாரெ
ன்று, துள்ளுவர்யாவருமனையதுண்மையாயினுங்குளத்தூர்
ச்சுகுணவள்ள, லுள்ளுவர்பாலருணிறுவும்வேதநாயகமகிப
னுரைத்தநீதி, தள்ளுவர்யாராதலிற்றேற்றேகாரந்தவிர்த்தி
சைத்தற்றகுதியாமே. (௩)

ஓதிநூலுணர்ந்தகுளத்தூர்வேதநாயகமாலுவப்பிற்செ
ய்த, நீதிநூறேவியலா சிரியனியலுணர்த்துதலா னிகரின்
ஞானச், சோதிநூலெனசொல்லாமிந்நூன்முனென்னாலு
ஞ்சொல்லிற்கா நூல், பாதிநூன்முக்கா நூலுவட்டுநூல் சில
ம்பிநூல்பருத்திநூலே. (௪)

வில்லாமதிற்குளத்தூர் வேதநாயகமகிபன் விரும்பிச்
செய்த, நல்லாருண்மகிழ்நீதிநூலிலுளகற்பனையு நயமுமோ
ரி, னெல்லாருங்கற்றவரேயெல்லாரும்பாடுநரேயெல்லாருக்
தாஞ், சொல்லாருமறவினரேயரிவினர்தந் துதியவருஞ்சூடு
வாரே. (௫)

முன்னோர்களுரைத்தபெருநீதிநூற்பொருடெரியமுய
வினம்மா, பின்னோர்க ளுரைத்தவுரை பலவவையோ ரினு
மையம்பிறந்தொன்றற்கொன், றன்னோர்சொன்மாறுபடும்
பொருள்விளங்கவுருபுமுதலவிழ்த்துப்பாடு, மின்னோர்நம்
வேதநாயகமுகிநூல்போலுளதோமதிக்குங்காலே. (௬)

பொருளுடையோ நீயேயோவடதிசைக்கோமகனுமு
ளன்புவனங்காக்கு, மருளுடையோ நீயேயோநெடுமாலுமு
யளநீதிமைனூல்சொல்லுந், தெருளுடையோநீயேயோள்வ

ளுவனுமுளன்குளத்தூர்ச் செல்வாநாளு, மிருளுடையவெ
ழுகதிர்நேர்வேதநாயகமகிபா வியம்புவாயே. (௭)

தாவிறாற்பொருட்கேள்வியுறலதிகமதற்கதிகந்தானே
கற்றல், மேவியதைவெளிப்படுத்தலதற்கதிகமதற்கதிகம்வி
யன்பாச்செய்தல், பாவினுங்கற்பனையமைத்த லதற்கதிகநீ
திநூல்பாடலுளும், பூவினிடையதிகமெனில்வேதநாயகம
கிபன்புகழெற்றுமே. (௮)

சேல்பாயும்புனற்குளத்தூர் வேதநாயகமகிபன்செய்த
நீதி, நூல்பாயுமறிஞரேனுண்ணியராய்ச்சிறந்துவரு நோன்
மையாலே, வேல்பாயுங்களிற்றரசர்மேன்மேலும்விருப்பமு
றவிளங்கியின்பச், சால்பாயுங்கடவுளடிக்கீழுறைவரென்ளு
ளுந்தவாதுதானே. (௯)

நூலியற்றியீதலொன்றேயுள்ளதெனக்கொள்ளலைபன்
னூலுமோர்நம், மாலியற்றிக் கொடுத்திடுமைந் திணைக்கோ
வையேற்றனையா லளவிலாத, சேலியற்றுபுனற்குளத்தூர்
வேதநாயகமகிபாசிறப்பச்செய்யுள், மாலியற்றலேற்றலிவை
யிரண்டினுநீயெப்போதும்பயிலுவாயே. (௧0)

ஆயபுவியாளுமாங்கிலேயமன்ன ராண்டோராயிரத்தெ
ண்ணூற்றியைம்பத்தொன்பதனுக்கொத்த, தூயபுகழ்காள
யுத்தி யாண்டுறுதைத் திங்கடொகுதஞ்சைச் சுபாசீகாழித்
தாலூகாவின், மேயமுன்சீ பதிகாரஞ் செலுத்திடுநன்ளுளி
ன்விளங்குகுளத்தூர்ச்சவரிமுத்துபால, னேயவரோதயன்
வேதநாயகப்பேர்க்குரிசினீதிநூலியற்றியரங் கேற்றினனன்
குறவே. (௧௧)

சாற்றுக்கவிகள்
முற்றிற்று.

உ

கடவுள்துணை.

நீதி நூல்.

காப்பு.

ஆதிநூலொன்று மரும்பயன்யா ருந்தெளிவாய்
நீதிநூலொன்று நிகழ்த்தவே—மாதிறமோ
டித்தரையனைத்தையு மியற்றியினிதிற்றுதிசெய்
கத்தன்மல ரொத்தகழல் காப்பு. (௧)

வேறு.

மாதிரந்தனில் வாழ்பவர்யாவரும்
தீதிகந்தறச் செய்கைமுயலுவா
நீதினூலை நிகழ்த்தநிகரிலா
வாதிதேவ னடியிணையேத்துவாம். (௨)

அவையடக்கம்.

வெயிலினைச்சோதிசெய்வான் விளக்கிடல்போலுங்காகங்
குயிலினுக்கிசையுணர்த்துங் கொள்கையேபோலுகட்ட
மயிலினுக்குணர்த்துங்கான வாரணமெனவும்யாவும்
பயிலுலகிற்குநீதி பகரயான்றுணிவுற்றேனால். (௩)

பானுவின்கதிரையுண்ட பனிங்கொளிசெய்தல்போலும்
வானுலாங்கொண்டல்பெய்யுமழையினைத்தழையிற்றாங்கித்
தானும்பெய்தருவைப்போலுந் தமிழொருமூன்றுமாராய்ந்
தானுவார்கவிசொல்வோர்மு னறிவிலேன்பாடலுற்றேன்.

மூடவரேயாட $ வந்தர் முன்னின்றுபார்த்துவக்கத்
திடமொடு ‡ மூகர்பாடச் செவிடர்கேட்டதிசயிக்கக்

ஆனுதல்-நிலைபெறுதல். $அந்தர்-குருடர். ‡மூசர்-ஊமையர்

கடலுலகினிற்கண்டென்னக் கனவினுங்கலையைத்தோரா
மடமையேனுலகநீதி வகுத்திடத்துணிந்தேன்மன்னு. ()

பயன்கொள்வோ ரதனைநல்கும் பசுவுருவிலதென் ருே
ரார், வியன்சினை வளவுநோக்கார் விளைந்ததிங் கனிபறிப்
போர், கயங்கொள்சே றகற்றித்தெண்ணீர் கைக்கொள்வா
ரென்னநூலி, னயன்கொள்வ தன்றிப்பாவி னவையை
நோக்கார் மேலோரே. (ச)

வேலைவாயுண்டநீரை மேகஞ்சிந்தினுமேசிந்துங்
காவிடைக்கொண்டநீரைக் கழனியக்காற்குநல்கும்
பாலர்கற்றவையாசான்பாற் பகர்வர்யா நூலுணர்ந்த
சிலர்பாற்கற்றதன்னோர் செவியுறநவின்றேனம்மா. (ரு)

கோவிலைப் பழிக்கினேரெண் குணனையும்பழித்த தொப்
பாம், காவினைப் பழிக்கனுண்டார் கடிமலர்ப் பழித்ததொ
ப்பாம், வாவியைப் பழிக்கிற்கொண்ட வண்புனற் பழித்த
தாமென், பாவினைப் பழிக்கிநீதிப் பயனையும் பழித்ததாமே.

உ

கடவுள்துணை.

நீ தி நூ ல்.

முதல் அதிகாரம்.

தெய்வமுண்டெனல்.

மண்டப மாதிகண்டோர் மயனுள னென்னல் போலுங்,
குண்டல முதல்கண் டோர்பொற் கொல்லனுண் டென்ன
ல்போலு, மொண்டுகில் கண்டோர் நெய்தோ னொருவனு
ண் டென்னல்போலு, மண்டமற் றகண்டஞ் செய்தோ னு
ளனென வறிவாய்நெஞ்சே. (க)

நீட்டுவோர்சுதி னின்றியாமோ சித்திரத்திகழ்பொற்
பாவை, யாட்டுவோ னின்றித்தானே யாடுமோ திவ்வியா
ழின், மீட்டுவோ னின்றிக்கீதம் விளையுமோ சராசரங்க,
ளூட்டுவோ னொருவனின்றி நன்கமைந் தொழுகுநகொல்
லோ. (உ)

மாமுத லசைதலாற்கா லுளதென மதிப்பாரெங்கும்,
பரவிய புகையாற் செந்தீ யுளதெனப் பகர்வார் சுற்றும்,
விரவிய மணத்தார் பாங்கர் வீயுளதென்று தேர்வார், பர
னுளனென லுண்மைக்குப் பாரெலாஞ் சாற்றுமன்னோன்.

நாதனில் லாதவீடு நாடுமே நடவா தென்னில்
வேதநா யகனிலானேல் விதிகதிர் மீனுதித்தல்
சீதநீர் பெயருக்கன் சீவராசிகள் சுதித்தல்
பூதபௌ நிகமெல்லாம் புரையற வொழுகற் பாற்ருே. (ச)

பூதம்யாவுக்கு மேனுய்ப் பொருந்திய விசும்பைக்காற்
றைற், வேதனு லதனைமண்ணோர் மெய்யுறை யுயிரைநெஞ்
சை, யேதமி லறத்தைக் கண்ணுற் பார்த்திலோ மெனினு
முண்டென், ருேதல்போற் றெய்வக் தானென் றுளதென
றேற்றமம்மா. (௬)

வாசமூக் கறியுமன்றி வாய்செவி விழிமெய்தோரா
பேசவா யறியுமன்றிப் பின்னையோர் புலன்றோரா து
நேசமார் தொண்டர்ஞான நேத்திரங் கொண்டுகாணு
மீசனை முகத்தின்கண்ணு லிகத்தில்யார் காணவல்லார். ()

வானின்றி மழையுமில்லை வயலின்றி விளைவுமில்லை
பானின்றி கன்றுமில்லை பரியின்றி யொளியுமில்லை
கோனின்றிக் காவலில்லை குமரர்தா யின்றியில்லை
மேனின்ற கடவுளின்றி மேதினியில்லை மாதோ. (எ)

கதிரவற்கொளியின்றென்னக்கண்ணிலார்கழறல்போலும்
* வதிரர்போாழியோசைமாறியதென்னல்போலும்
மெதிருறுபொருளைக்காணுதிட்டுருறுபித்தர்போலு
மதியிலார்தேவின்றென்னமருளொடுமியம்புவாரே. (அ)

---

* வதிரர்=செவிடர்.

அத்தன்றாய்மூன்னோர்தம்மையறிகிலானிலரென்பானே
சத்தமின்சுவைகந்ததனைத்தரிசியானிலனென்பானே
நித்தனைக்கண்ணிற்காணாநீர்மையாவிலனென்றோதும்
பித்தரிற்பித்தர்பாரிற்பேசிடவுளரோவம்மா. (௯)

தேவனேயிலனேன்னோக்குந்தீநரகில்லைவேதம்
பாவபுண்ணியங்களில்லைப்பரணிலையென்போனில்லின்
மேவலர்நீயிட்டன்னான் * விபவமெல்லாஞ்சிதைத்துச்
சீவனைவதைசெய்தாலென்செய்குவன்சிதட்டன்றானே. (௧௦)

முதல் அதிகாரம்=தெய்வமுண்டெனல்.

முற்றுப்பெற்றது.

2-ம், அதிகாரம்.

தெய்வத் தன்மையும்

வாழ்த்தும்.

ஆதியி றில்லான்றன்னை யமைத்தகா ரணமொன்றில்
லான், கோதிலான் கணத்துளண்டங் கோடிசெய் தழிக்க
வல்லா, னோதிடு மொப்பொன்றில்லா னுருவிலா னுருவிண்
டங்குஞ், சோதிதன் னிழலாக்கொண்ட சோதியைத்துதி
யாய்நெஞ்சே. (௧)

ஆணலன்பெண்ணுமல்லனஃறிணையலன்பாரல்லன்
சேணலன்புனல்காலல்லன்றியலனனைம்புலத்தாற்
காணரும்வடிவனித்தன்கத்தனம்மத்தன்சுத்தன்
மாணறமுருக்கொண்டன்னமாட்சியான்கடவுணெஞ்சே.()

தரையெலா முளன்றரும்பு தன்னினு முளனண்டா
ண்ட, நிரையெலா முளன்மெய்யாவி நெஞ்சுளு முளனிய
ம்பு, முரையெலா முளன்றான்மேவி யுறைபொருள் கெடக்
கொடாதான், புரைதபு தன்னைத்தானே பொருவவோ
னொருவனன்றே. (௩)

* விபவம்=செல்வம்.

உடுக்கணம்யாவும்வெவ்வேறுதயனுமொவ்வொன்றிற்கு
நடுக்கட்பூவலயஞ்சோம * நபமொடும்வரம்பில்கோடி
யடுக்கடுக்காச்செய்தெல்லாமந்தரத்தமைந்துநிற்க
விடுக்கணொன்றின்றிக்காக்குமெம்பிரான்பெரியனன்றே.

பண்ணிய புவனமெல்லாம் படர்கையிற் பரிக்குமேக,
னண்ணிய காஞ்சொற்றேயி னழீஇயொன்றோ டொன்று
மே, திண்ணிய வகிலகோடி சிதைந்திரு மெனவறிந்தும்,
புண்ணிய மனுவாற்றேவைப் போற்றிடா வாறென்னெஞ்
சே. (௫)

இதயந்தன் வேகத்தோடு மெண்ணிலவ் வியத்தகால
ங், கதமொடு மீச்சென்றாலுங் கடவுண்மெய்ந் நடுவையன்
றி, யிதர்வங் கத்தைக்காணு தெனின்முடி யெவண்பொன்
னுக்கும், பதமெவ னகண்டாகாரப் பராபரற் குரையிற்
பாரீர். ௬)

விலகரு மருளின்மீக்கூர் விமலனை வாழ்த்தவேண்டி
னலகில்கற் பங்களேநம் மாயுளாய் மும்மைத்தாய
வுலகமோ ருடம்பாயந்த வுடம்பெலாம் வாயாய்நித்தம்
பலகவிமாலைசூட்டிப்பாவினுமுடியுங்கொல்லோ. (௭)

உருவில்சூனியமாயா துமுணர்விலா திருந்தநம்மைத்
திருவுடலோடுஞானச்சீவனுகப்படைத்துச்
சருவநன்மையுமேதந்துதன்னையுந்தந்தனுதன்
மருமலராடிக்குநம்மைவழங்குதல்பெரிதோநெஞ்சே. (௮)

பூமிநம்மில்லாமற்றைப்பூதங்கள்பணிசெய்வோராஞ்
சோமன்மீன்கதிர்விளக்காஞ்சூழ்மரம்பயிராகாராச்
சேமவைப்பாநமக்கித்திரவியமியாவுநல்குஞ்
சாமியையுவமித்தேத்தச் ‡ சாமியமியாதுநெஞ்சே. (௯)

தோன்றகவிடமதென்னுந்துன்பசாகரத்திலத்தன்
அறன்றருமலர்த்தாட்டெப்பஞ்சேர்கிலாதகன்றுநிற்போர்

* நபம் ஆகாயம். ‡ சாமியம் உவமானம்.

வான்றனைப்பிரிந்தபுள்ளும்வாழுநீர்நீத்தமீனுங்
கான்றனையகல்விலங்குங்காவறீர்நகருமொப்பார். (க0)

பாரெலாம் பகைசெய்தாலும் பராபரன் கருணையுண்
டேல், சாருமோர் துயருமுண்டோ தாயினுமினிய வைய
ன், சீரருளின்றே றெண்ணி றேர்கரி பரிபதாதி, போரணி
யுடையாரேனும் பிழைக்குமா றெவன்கோ னெஞ்சே.

இருநிதி பெற்றதீன ரெண்ணிடா திகழ்ந்ததொப்ப
வருவமா யுருவமாய்நம் மாருயிர்க் குயிராயண்டம்
பெருநில மெங்குமின்பம் பெருக்கெடுத் தோங்கிநிற்குங்
கருணையங் கடலாடாது கழித்தனை வாழ்நாணெஞ்சே. ()

முன்னவன் றனையுளத்து முன்னமுன் னத்தெவிட்டாக்
கன்னலோவமுதோபாகோகற்கண்டோவெனத்தித்திக்கு
மின்னன்மேவாதவன்றனெங்கணுநிறைந்திருந்து
மன்னனைநீத்தசெய்போலையனைநீத்தாய்நெஞ்சே. (கங)

ஆயுணாள்சிலவெங்காமமனந்தர்நோய்சோம்புகொண்ட
காயமேவளர்க்கவென்னில்கருமங்கள்செயலிவ்வாறேற்
தேயுநாள்கழியநிற்குஞ்சேடநாளற்பமாகுந்
தூயநாதனைத்தொழாமற்றொலைக்கின்றாயழியுநெஞ்சே. ()

பொங்கலை யாழிதாண்டிப் பொருப்புகழ் கடந்தோயா
ம, லங்குமிங் குந்திரிந்தே யழிந்துபோ முடலைக்காப்பா,
யெங்கணு முள்ளொன்றாளுன் னிருக்கையி னிருந்துபோ
ற்றி, பங்கமில்சுகம்பெற்றுய்யப் பாரமென்பகராய்நெஞ்சே.

மாசறுகடவுள்பாதமலரிணைத்தினமும்போற்றிப்
பாசமில்சுகம்பெறுமற்பவஞ்சத்தூடுழலல்பைம்பொ
ஞசனந்தன்னிலேறியரசுசெய்தகைமைநீத்துக்
காசனக்கழுவிலேறுங்கயமையேசடுக்குமாதோ. (கசு)

போதநாயகனையுன்னப்புந்தியேவெந்தீயொப்பாந்
தாதலராடிவணங்காத்தலைகுலைசிலையாஞ்சேர்சான்

மாதலத்தவனைவாழ்த்தாவாயதுதூயதன்று
காதலன்பொடுநீர்தூவாக்கண்களேபுண்களாமால். (கஎ)

சதிரவன் கிரணக்கையாற் கடவுளைத் தொழுவான் பு
ட்கள், சுதியொடு மாடிப்பாடித் துதிசெயுந் தருக்களெல்
லாம், பொதியலர் தூவிப்போற்றும் பூதந்தத் தொழில்செ
ய்தேத்து, மதிகடலொலி யால்வாழ்த்து மகமேநீவாழ்த்தா
தென்னே. (கஅ)

அறிவிலாரரசரென்றற்கமைச்சரேசான்றுமன்னோர்
செறிபெருந்தானையான்மெய்த்திறலிலாரெனவறிந்தோம்
வறியரென்றிறையிரக்கும்வாய்மையாலறிந்தோமென்று
நெறிவழாதுலகந்தாங்குநிருபனைத்துதியாய்நெஞ்சே. (க௯)

இரவினுமற்றோர்பாராவிடையினும்பாவஞ்செய்வாய்
கரதலாமலகம்போன்றுமுக்காலமுமுணர்வோனெங்குந்
தரமொடுவீற்றிருக்குந்தன்மையெள்ளளவுமோராய்
பானிலாவிடமொன்றுண்டேற்பவமவண்செய்நீநெஞ்சே.

உ-ம் அதிகாரம் தெய்வத்தன்மையும்வாழ்த்தும்,

முற்றுப்பெற்றது.

ஆக அதிகாரம் உ-க்குத் திருவிருத்தம்-ங0.

3-ம், அதிகாரம்.

அரசியல்பு.

எந்தவேளையினு நொந்தவர் துயர்கேட் டடரிழைப் ப
வன்றன்தேக, மைந்தனே யெனினும் வதைத்திட வொல்
கான் மாக்களின் சுகநலமன்றிச், சிந்தனைமற்றோர் பொரு
ளினிற் செலுத்தான் றீமொழி சனவிலும் புகலான், றந்
தைபோற் றாய்போலெவரையு மோம்புந் தன்மையனே யி
றையன்றே. (க)

மன்னுயிரனைத்துந் தன்னுயிரென்ன மகிழ்வொடுசாங்கியாரேனு, மின்னலுற் றயர்ந்தோ மெனக்கலுழ்ந் திடிற்றன் னிருவிழி நீரினையுதுப்பா, னன்னவெந்துயரை நீக்குமுன்றுணைன் றயின்றுடான் றுயின்றிடானெவரு, நன்னகரெங்கு முளனெனப்பசர நாடொறு மியங்குவோன் கோனே. (௨)

சாயறியாத சேயிருந்தாலுந் தானறியாதவ ரில்லை, யாயவதன்மையினு லறளழிகிற்கு மறிஞர் யறிந்தவர்க்குரிய, தேயவாதிக்கந் தந்துநன்னீதி செலுத்தியெங் கணுமருந்தினுக்குந்; தீயவரிலரென் றிசையுறமடக்குந் திறலுளோன் பூதலவேந்தே. (௩)

தன்புகழ்கருதி மருவலரோடுஞ் சமர்புரிந் துயிர்களைமாய்த்துத், துன்பமேசெய்ய வியைந்திடான் முற்பேர்தொடுத்திடான் றன்னுயிரனைய, மன்பதைக் கிடுக்கண் யாவரே செயினும் வாளமரியற்றி நீக்கிடுவா, னின்பதுன்பங்க ணடக்குமற்றவர்க்கு மேகமென் றெண்ணுவோன் வேந்தே. (௪)

தானீதியற்று பனுநெறிப்படிமுன் றுனடந்தறவழிகாட்டி, ஞானநற்குணத்தின் மேன்மையா லெவர்க்கு நாயகந் தானெனத்தெரிந்துத், தாலாதிமூந்தயையு மெய்மையுந்தவமுந் தற்பரன்வணக்கமும் பொறையு, மானமுமிகுத்துநாரெலாஞ்செழிக்க மகிழரசளிப்பவன் மன்னே. (௫)

சத்திரஞ்சோலை சாலைகள்குளங்க டண்ணதிமதகொடா லயங்கள், வித்தியாசாலை மாடகூடங்கள் வேறுவேறமைத்துவே ளாண்மை, சத்தியமகலா வாணிகமாதி சகலநற்றொழிலவரவர்க, ணித்தியமுயல வித்திலசபுரக்கு நிருபனேநிருபனு மன்றே. (௬)

காதிறைவனுக்குக் கண்ணெனலான்மெய் காண்குறுனெனுமொழிமாற்றி, வாதிகள்சாட்சி சாதகமெல்லாம் வகைவகையினிது கேட்டமைந்த, மேதினிக்கிழமை நீக்கிடுந்தன்மை வினையினு நடுவினீங்காது, பாதியாவனுவும் பகுந்துதீர்ப்பதுவே பார்த்திபன் கடமையாமன்றே. (௭)

மன்னவன்வலிசெங் கோலினலன்றி வாளினுற் சேனையாலில்லை, நன்னெறிவழுவா மன்னவன் றனக்கு நாடெல்லாம் போரணுலகின், மன்னுயிரெல்லா மவன்படையன்னோர் மனமெலாமவனுறைபீட, மின்னதன்மையனு யரசளிப்பவனை யிகல்செயுந்தெறுநருமுளரோ. (௮)

கைப்புரையேற்றுப் பொய்ப்புகழேலாக் காதின னழிள்மொழி கண்ணன், றப்புசை வழங்கா நாவினன் புவியோர்தரசன்றுனெனவுணர் மனத்தன், செப்பயன் மடவார் காணகுமூாத்தன் றிருந்தலா சாணரும் புறத்த, னெப்பொழுதினுஞ்சென் றியாருங்காண்முகத்த னீசனன் புடையவனிறையே. (௯)

கொடுங்கோ லரசன்.

கொடியமன்னவர்க்குக் குடிகளேயொன்னர் கோட்டையேயமர்க்களமவர்த, மடிகடோய்நிலமெங்கணும்படுகுழியாமயின் றிடுமன்னமும்விடமா, நெடியவாசனமே காசன மேடை நிமிருழையோர் நமன்றூதர், கடிமனையானக் காடெனிற் கொடுங்கோற் காரணருய்யுமாறுளதோ. (௰)

௩-ம். அதிகாரம் அரசரியல்பு முற்றுப் பெற்றது.

ஆக அதிகாரம் ௩-க்குத் திருவிருத்தம் ௩௰.

4-ம், அதிகாரம்.

குடிகளியல்பு.

வேந்தனேயில்லா விடினுலகத்து மேலதுகீழதா மணஞ்செய், காந்தனுக்கடங்கிக் களத்திரநடவாள்காதலர் தந்தைசொற் கேளார். மாந்தர்வேளாண்மை முதற்றமக்குரிய வளமைகூர்தொழில்களின் முயலார், சாந்தருந்தீய ராவரேற்றீயர் தன்மையைச்சாற்றுமாறெவனே. (௧)

நம்மனைமைந்தர் கிரகவாழ் வெல்லா நரபதியாலவ னிவ
னே, லம்மனைதியர்கைவசமாவளருகிதிகொள்ளையாகாளும்,
வெம்மையோடொருவ ரொருவரையுண்பார்மேலவரசடரா
ன் மெலிவாரம்மவீதெல்லா முணர்ந்தாசாணைக்கமைதனற்
குடிகளினியல்பே. (௨)

வேறு.

நதியினு முயர்பனை நனைந்துங் கருதலர்
கதியினு முயர்வரைத் தருகாள்காயுமால்
பதியினு முயர்தடங் காப்பைஞ் ஞீலங்கள்
விதிசெயல் சிதைந்தக மெலிந்துநையுமே (௩)

தரையெனு முடற்கொரு தலைவனே தலை
நார்பல வுறுப்புக ணலங்கொண் மெய்யது
சிரமுறும் பொறிவழிச் செல்லுந்தன்மைபோ
லூரவாசனுக்கமைந் தொழுகும் வையமே. (௪)

பானுவெப்புடையவ னெனினும் பானுவே
வானுல வானெனில் வைய்ய முய்யுமோ
கோனருங் கொடியனே யெனினுங் கோனின்றி
மானவருய்யவோர் வழியுமில்லையே. (௫)

படியின்மன் னுயிர்க்கெலாம் பாதுசெய்கின்ற
நெடியமா சேனையை நெறிசெய் மாந்தரைக்
கடியோடுந் தாங்கவூர்க் காரியஞ்செயக்
குடியுறை யிறையவன் கொள்ளுங் கொள்கையே. (௬)

வேறு.

கோவரிய சீவன்குடிக ளுடலாவார்
சீவன்சும்மா விருக்கத் தேகமுழைத் தோம்புதல்போற்
பூவலாய மீதினிற்றம் * பூட்சிகளி னுழைத்துக்
காவலனைக் காக்கக் கடனுங் குடிகளுக்கே. (௭)

௪-ம் அதிகாரம்.

குடிகளியல்பு முற்றுப்பெற்றது.

ஆக அதிகாரம் ௪-க்குத் திருவிருத்தம் ௪௭.

* பூட்சி=சரீரம்.

5-ம், அதிகாரம்.

ஞானசாரியன் பெருமை.

அகலவி ருலகஞான விளக்கினை யருளினேற்றிச்
சகலமு நல்குங்கேள்வித் தனத்தினை நல்கியாதிப்
பகவன்றன் சொரூபங்காட்டிப் பவமறமிரண்டுங் காட்டி
சுகநிலை காட்டுந்தியாகத் தோன்றலை மறவாநெஞ்சே. (௧)

வேறு.

கானலெனப்படு காயமிதப்பன்
ஊனவமேபுவி தங்கவளித்தா
னீனமிலாரிய னென்றுமொருங்கா
ஞானவுடம்பினை நல்கினனன்றே.

வேறு.

நாட்டமின்றி யொளியெப்பயனை நல்குமனையி
பூட்டு போன்றிறவு சோலினை யலாதுபுகுமோ
வேட்டகத்தரிய நூல்களுளவேனு மினிதாக்
காட்டருட்குரவ னின்றியெவர் காண்பர் பயனே. (௩)

ஞானசூரிய னெனுங்குரவ னின்றி நரர்த
மீனவெம்பவ விராவை யகலா ரெவருமே
கானம்வாழ் மிருகமா வர்கதிவாயில் பொரியு
மானவர்க் குரையுளாய் நிரயம்வாய் விரியுமே. (௪)

மண்ணிறைக் கடியராயுயிர் வளர்ப்பர் பலரும்
விண்ணிறைக் கடியரா யெவரும் வீடுபெறவே
புண்ணியத் திருமறைப் பொருளை யோதபுனித
ரெண்ணிடற்கரிய பெற்றியை யியம்ப லெளிதே. (௫)

ஐம்புலக்கத வடைத்துமனமாவை யறிவாங்
கம்பம்வீக் கியளுருஞ் சுகமெனக் கருதியே

செம்பொனைத் திரணமாமதி திறத்த குதியோர்
தம்பெரும்புக ழியம்புதற்குத் தாமதோ.

வேறு.

தலைகீழுறச் செய்யினுந் தீபம்விண்டன்னை நோக்குங்
கலைதேயினுந் தண்கதிர்விசுமக் கங்குற் றிங்கள்
விலைமாமணி யைப்பொடி செய்யினு மின்னலூது
நிலைநீங்குவ ரோர்துயர் மேவினு நீர்மையோரே. (எ)

கைத்திட்ட மருந்திலக் காரங்கலந்து கூட்டி
மத்தித்தருள் பண்டிதர்போன் மறநோய் தவிர்ப்பா
னெத்திக் கினுங்கேட்பவர் காதுளமின்ப மேவித்
தித்திட வாரியர் நன்மறை செப்புவாரே. (அ)

சிறுவாய்க் கலத்துட்டுளியாகச் செலுத்துநீர்போ
லறியாச் சிறுவர்க்கு முணர்ந்தறி யாதவர்க்கும்
வறியார்க்கும் விளங்கிடவே தெளிவா வகுத்து
நெறியைத் தெரிவிப்பர் நன்ஞானெறி நின்றமேலோர். (கூ)

வைவார்தமை வாழ்த்தியு நெஞ்சில்வருத்தமுற்று
நைவாருட னைந்தழுதுந்தமை நண்ணித் துன்பஞ்
செய்வாருறு பீழைநினைந்துதஞ் சிந்தை நொந்து
மெய்மாமறை யின்பயனேதுவர் மேன்மையோரே. (ய)

வேறு.

பரிதியின் கிரணமங் கணமதிற் படியினு
மரிதின் மாசணுகுறு தகலல்போ லினியகற்
சரிதமில் லவர்குழாஞ் சார்ந்து போதிக்கினுந்
துரிதவெம் பவமுறார் தொன்மறைக் கிழவரே. (யக)

5-ம், அதிகாரம்.

ஞானசாரியன்பெருமை முற்றுப்பெற்றது.

ஆக அதிகாரம் ரு-க்கு திருவிருத்தம் ருஅ.

6-ம், அதிகாரம்.

பொய்க்குருவின்றன்மை.

திருடன்பொருட்காவலனாதலுஞ்செல்வழிக்குக்
குருடன்குருடன்றனையேதுணைக்கொள்ளல்போலு
மிருடங்குளமாந்தரைவான்கதியேற்றவென்று
வருடங்கியநெஞ்சமிலான்குருவாயவாறே. (க)

பெருவெம்பிணியாளன்மற்றோர்பிணிபேரும்வண்ணந்
திருமந்திரஞ்சொல்வனென்றேதிடிற்றிண்மையாமோ
தருமந்தனைநாட்டவந்தோன்குறைதானுளானே
லிருமண்டலமீதவன்சொல்லெவரேற்பர்மாதோ. (உ)

பாவச்சலதிக்குளாறுவகைபாருளோர்க்குக்
காவற்றுணையாங்குரவன்குணங்கல்வியின்றி
யாவற்றனைபூண்டவனேயெனிலாருங்கொள்ளா
ரேவத்தெரியான் * றிமின்மீதெவரேறுவாரே. (௩)

பழிதீர்கலையாவுமுணர்ந்தும்பலர்க்குரைத்து
மிழிவேயுறத்தாமடங்காமதியீனரார்க்கும்
வழிகாட்டிடநாட்டுமரத்தையும்வையமேச
விழியற்றவன்கையினில்வைத்தவிளக்குநேர்வார். (௪)

சொன்னத்திருடன்சிறுகள்வனைத்தூரியேச
லென்னப்பொருளாசையுளான்பிறரிச்சைதீர்த்து
மன்னத்திருஞானமுரைத்தன்மற்றோர்துறக்கும்
பொன்னைக்கவரச்செயும்வஞ்சனைபோலுமாதோ. (௫)

வேறு.

வாயிற்றேனுந்தன்வாலிற்கொடுக்குஞ்சே
ரீயின்வாயினிலிங்கிதச்சொல்லொடுந்
தீயசெய்கையுளானைத்தினஞ்சிறு
சேயுமெள்ளுந்தன்சிந்தையுமெள்ளுமே. (௬)

---

* திமில்=மாக்கலம்.

இகத்தின்வாழ்வினிலிச்சயருன்றனை
சகத்தினிற்குருசாமியென்றேதுதல்
சுகத்தைநீக்கித்துயரஞ்செறிநா
ரகத்தைவீடெனறைதல்சிவனுமே. (௭)

ஆதிதேவனறிவில்லவர்செயுங்
கோதினைக்சுமைகொண்டுபொறுக்கினு
நீதிநூலைவுணர்ந்துநெறிதவிர்
வேதியர்க்குவிமோசனமில்லையே. (௮)

ஒருமையாய்த்தன்னுதாநிமித்தமே
தருமவேடந்தரிக்குதல்வெம்புவி
* புருவைதன்னைப்புசிக்கப்புருவையின்
சுருமம்பூண்டங்குசார்தனிகர்க்குமே. (௯)

௬-ம் அதிகாரம் பொய்க்குருவின்றன்மை
முற்றுப்பெற்றது.
ஆக அதிகாரம் ௬-க்குத் திருவிருத்தம் ௬௰.

7-ம், அதிகாரம்.

பிதாமாதாவை வணங்கல்.

சின்னவோர்பொருடந்தோரைச்சீவனுள்ளளவிமுள்ளத்
துன்னவேவேண்டுமென்னவுரைத்தனர்பெரியோர்தேகர்
தன்னையாருயிரைச்சீரார்தாணியின்வாழ்வைத்தந்த
வன்னைதந்தைக்குச்செய்யுமருங்கைம்மாறுளதோவம்மா. ()

கடவுளைவருந்திச்சூலாய்க்கைப்புறையுண்டவந்த
மிடர்களுற்றுதாந்தன்னிலீரைந்துதிங்கடாங்கிப்
புடவியிலீன்றுபன்னாள்பொற்றனப்பாலையூட்டித்
திடமுறவளர்த்துவிட்டசெல்வியைவணங்காய்நெஞ்சே.

எப்புவிகளும்புரக்குமீசனைத்துதிக்கவேண்டி
னப்பனேதாயேயென்போமவரையேதுதிக்கவேண்டி

---

* புருவை=ஆடு.

னொப்பனையுளதோவேலையுலகிற்நட்புலனிற்றோன்றுஞ்
செப்பருந்தெய்வமன்னர்சேவடிபோற்றாய்நெஞ்சே. (௩)

வைத்தவருளமுவப்ப மலர்கிழல் கனியீயாத
வத்தருத் தன்னைவெட்டி யழலிடுமாபோ லீன்று
கைத்தலத் தேந்திக்காத்த காதற்றாய் பிதாவை யோம்பாய்
பித்தரை யத்தன்கொன்றி பெருநா கழற்சேர்ப்பானே. (௪)

ஈன்றவர் நம்மாலுற்ற வெண்ணரு மிடர் கட்கான்ற
மூன்றுல கமுமொப்பாமோ மூப்பினு விளைப்பாளன்னார்
கான்றவன் சொற்கள்கன்னல் கான்றவன்பாகெனக்கொண்
டூன்றுகோ லென்னதாங்கி யூழியஞ்செய்பாய்நெஞ்சே. (௫)

ஈங்கெதிருதவி * வெஃகா தெவருமோருதவிசெய்யா [மைத்
ரோங்குஞ்சேய் வாழும் * வீயு முடலெய்க்கும் பொழுதுதம்
தாங்கிடுந் தாங்காதென்னுந் தன்மைநோக்காதுபெற்றோர்
பாங்குடன் வளர்க்குமன்பு பரவலாந்தகைமைத்தன்றே. (௬)

மண்ணினி லன்னைதந்தை மறமதஞ்செயினுநோன்பு
பண்ணினு முடல்வருந்தப் பணிபுரி யினுமருந்தொன்
றுண்ணினுங் களிக்கினுந்துன் புற்றய ரினுமனத்தொன்
றெண்ணினுந்தம்பொருட்டன்றின்சுதர்பொருட்டாலன்றோ

ஐயமெய் யம்மணத்தோ டழுவதை யன்றிபேசச்
செய்யவொன் றறியாநொய்ய சிற்றுடர் சேய்வளர்ந்திங்
குய்யவேண் டுவனசெயதா ருயிரினு மினிதாக்காக்கும்
பொய்யிலன் புடைத்தாய்தந்தை போல்பவருளரோநெஞ்சே.

மனையவள் வீயின்வேறோர் மனைவியைக் கொளலாம்பெற்ற
தனையரா தியரிறப்பிற் றனித்தனி பெறலாம்மின்னும்
புனைபொருணீங்கின்மற்றோர் பொருளையும் பெறலாமத்த
னனையிறந் திடின்வேறத்த னனைவரு வாரோநெஞ்சே. (௯)

---

* வெஃகல் - விரும்பல். * வீதல் - சாதல்

வேறு.

ஒருத்திபஞ்சகாலத்திற் றாதைக்குத்தன்மூலைப்பா லூட்டிக்காத்தா, ளொருத்தமிசைத் தந்தையினைச்சுமந்தோடி யொருவனொன்னா ரிடரைத்தீர்த்தா, னொருத்தன்றன்றந்தைக்கே யுயிர்கொடுத்தா னெனப்பலவா வுரோமைநாட்டின், சரித்திரஞ்சொல் வதையறிவாய் நெஞ்சமே யீன்றோரைத்தாங்குவாயே.

௭-ம் அதிகாரம் பிதாமாதாவைவணங்கல்
முற்றுப்பெற்றது.

ஆக அதிகாரம் - ௭ - க்குத் திருவிருத்தம் - ௭௭.

8-ம், அதிகாரம்

பாலரைவளர்த்தலும் படிப்பித்தலும்.

அயற்பொரு ணிரங்கவ ராதனங்கள் போற்
செயப்பிறி தறிகிலாச் சேயர் சுற்றுளோர்
கயப்புறுந் தீச்செயல் கற்கை யாலவர்
நயப்புறுஞ் சேர்க்கையை விலக்க னன்றரோ. (௧)

வளையிள மரந்தனை நிமிர்த்தல் வாய்க்கும்பொ
னிளகிய பொழுதணி யியற்ற லாகுநல்
வளமுரு கேள்விநூன் மாண்பு நற்குண
மிளமையி லன்றிமூப் பெய்தி னெய்துமோ. (௨)

மாவினா லிருவரு மருவி மாசிலாப்
பாலனைப் பயந்தபின் படிப்பியா துயர்
தாலமேற் செல்வமா வளர்த்தறங் கட்கோர்
காலனை வளர்க்கின்ற காட்சிபோலுமே. (௩)

தீதுநன் றறிகிலாச் சேயரென் செய்வார்
கோதற வவரைநன் னெறியிற் கூட்டிடா
தேதங்க ளவர்முன்செய் திழிவைக் கற்பிக்குந்
தானதாய் புதல்வர்க்குச் சத்து ருக்களே. (௪)

சுகமுறு வாழ்வில ரெனினுந் தோன்றற்குச்
சுகமகிழ் கலையறந் தனைப் பயிற்றுத
வகனினைந் ததுதரு மாதனந் தனை
யிகபர மிரண்டினை யீத லொக்குமே. (௫)

கலைபயிற்றாதுகா தலர்க்கு மாநிதி
நிலையென விளிக்குத னெறியில் பித்தர்க்குக்
கொலைசெய்வா ளீவதுங் குழவி தன்னைமா
மலையினோ ரத்துவைப் பதுவு மானுமே. (௬)

பயிர்களை யெடுத்திடப் பலனளித்தல் போற்
செயிரினைக் கடிந்துநற் செயல்வி யந்தருந்
தயையொடுஞ் சேயினை வளர்க்குந் தந்தைதாய்
துயருறா வண்ணமத் தோன்றல் காக்குமே. (௭)

நீதிசெல வாய்க்கெடு நீசர் வவ்வுவர்
மதியினை மயக்கிவெம் மறம் விளைத்திடுங்
கொதியழ னாகிடுங் குணமுங் கல்வியும்
விதிதரும் பதிதரும் வீடு நல்குமே. (௮)

புவிநடை கடவுண்மெய் போதமன் பறஞ்
செவியினோ தாதொரு சேயைப் பார்விட
லவியென வூருமா றறிகிலான் றனைக்
* கவியமில் புரவிவைத் தோட்டுங் காட்சியே. (௯)

தீயராய் வறியராய்ச் சிலர்வருந்தலுந்
தூயராய்ச் சிலர்புவி துதிக்க வாழ்தலுந்
தாயினாற் றந்தையாற் சமைந்த தன்மையாற்
சேயரை நன்னெறி செலுத்தன் மேன்மையே. (௰)

௮-ம். அதிகாரம் பாலரைவளர்த்தலும் படிப்யித்தலும்
முற்றுப்பெற்றது.

ஆக அதிகாரம் ௮ - க்கு திருவிருத்தம் ௮௭.

---

* கவியம் - கடிவாளம்.

௯-ம் அதிகாரம்.

மாதரைப்படிப்பித்தல்.

——(*)——

கல்வியே யறவழி காட்டு மாண்மகன்
செல்வழி யறிந்திடான் வித்தை தேறுமு
னல்வளர் கூந்தலா ரறிய நூலின்றி
நல்வழி யுணர்ந்துதி னடக்கற் பாலரோ. (௧)

பெண்மகள் கெடுவளென் றஞ்சிப் பெற்றவ
னுண்மைநூ லவட்குணர்த் தாமைதன்மனைக்
கண்மறு புருடரைக் காணுமென்றதை
யெண்மையாய்த் தவன்பறித் தெறித லொக்குமேல். (௨)

காவலன் பயத்தினாற் கற்பைக் காக்கின்ற
பாவைய ரரியநூற் பயன்றெரிந்திடிற்
பாவபுண் ணியநெறி யறியும் பண்பினாற்
சீவனிங் கினுமய லாரைச் சேர்வரோ. (௩)

பொருந்துமற் கலைதெரி பூவைகற்பது
திருந்தியே மிகுமலாற் றேய்ந்து போமெனல்
வருந்திடா துயிர்தரு மருந்தை மாணிட
ருருந்திடிற் சாவரென் றறைத லொக்குமே. (௪)

மூடவரே நடக்கினு மூங்கை பேசினுந்
திடமொடந் தகர்வழி தெரிந்து செல்லினு
மடமயி லனையர் நூல் வாசி யாரெனி
லடமினன் னெறிதெரிந் தமையற் பாலரோ. (௫)

அரிவையர் நேசமு மார வல்லினில்
விரிசுடர் விளக்கென விளங்கு வாரவர்க்
குரியநன் னூலுணர்த் தாமை கூடையா
லெரியொளி விளக்கினை மறைத்த லொக்குமே. (௬)

நீதிநூன் மைந்தர்க்கு நிகழ்த்தி மென்மல
ரோதியர்க்கோதிடா தொழித்தன் மெய்யினிற்
பாதியை யேயலங்கரித்துப் பாதிமெய்
மீதினி லணியின்றி விடுத்த லொக்குமோ. (௭)

இக்கினி நகுமொழி யெழின்மின் னாரினண்
மக்கண் மிக்கோரெனன் மடமையா மிரண்
* டக்கமு மொக்குமே யன்றி நல்லக
ணெக்கண்மற் றெக்கணே யிழிவு டைக்கணே.

வேறு.

கலையுணர்ந்தறி யாசவோர் கன்னியை
யுலைவுறுஞ்சமு சாரத்தி னுயக்குத
னிலையுணர்ந்தற னீந்தறி யான்றனை
யலைகடற்கண மிழ்த்தலை யொக்குமே.

வேறு.

நல்லறிவேயணி நன்னுதலார்க்கஃ
தில்லவரோடுமி யைந்துகலத்தல்
புல்லுயிர்நீங்குபு மூக்கொள்சவத்தைக்
கல்லுருவைப்புணர் காமநிகர்த்ததே. (௮)

௯-ம் அதிகாரம் மாதரைப்படிப்பித்தல்.
முற்றுப்பெற்றது.
ஆக அதிகாரம் ௯-க்கு திருவிருத்தம் ௯௭.

௧௦-ம் அதிகாரம்.

சகோதரரியல்பு.

தந்தைதாயொருவர்தம்மைத் தாங்கியவதரமென்று
மூந்தவின்பாலருந்து முலையொன்று வளருமில்லொன்
றிந்தவாறெல்லாமொன்று மியைந்தசோதாரன்புற்று
சிந்தையுமொன்றிப்பாலுந் தேனும்போல் விளங்கனன்றே. ()

---

* அக்கம் - கண்.

வேறு.

ஆதரைமிசைநா ராயயாவருஞ்
சோதரரெனமிகத் துன்னனன்றென
வேதமேயோதுமால் விளங்குஞ்சோதரர்
மீதமைநட்பினை விளம்பல்வேண்டுமோ. (௨)

பயந்தவர்சோதர் தம்மைப்பண்பொடு
வியந்துபேணுதவன் வேறுளோர்களை
யியைந்துபேணுனென வெண்ணினீக்குவ
ருயர்ந்தவரவனொடு முறவுதன்னையே. (௩)

ஒற்றையொண்சுடரினை யொழிக்குமெல்வளி
கற்றையாப்பலசுடர் கலப்பின்மாவளி
சற்றும்வெல்லாதுசூழ் தமர்சகோதரங்
பற்றொருமெருவிடிற் படருறார்களே. (௪)

ஓரிழையறுத்திட லெளிதொன்றாகவே
சேரிழைபலவுறத் திரித்தாம்பினை
பாருமேசிதைத்திடா ரமைசகோதரர்
சீரொடுபொருந்திடிற் றிறல்கொள்வாரரோ (௫)

௰-ம் அதிகாரம் சகோதரரியல்பு
முற்றுப்பெற்றது.

ஆக அதிகாரம்-௰-க்கு திருவிருத்தம் ௱௨.

புருடபாரியரியல்பு.

ஆவியின்றியுடலில்லை யுடலின்றியாவியில்லை யதுபோற் பத்தா, தேவியெனு மிருவர்சேர்ந் தோருருவாஞ் செழுமலருந் தேனும்போல, மேவியவரிருவருமே நள்ளாது முரண்செயில் விளங்குமெய்யுஞ், சீவனுமொன்றோடொன்று போராடி யழிந்த தொக்குஞ் செப்புங்காலே. (௧)

மணியுமொளியும்போலாண் மகனுமனைவியும்பொருந்தி வாழுவாரேற், பிணியுறுமாதுலரெனினும் பெருஞ்செல்வர் நகுலமும்வெம் பெரும்பாம்புபோற், றணியாதபகையுற்று நள்ளாரேனுயிரற்ற சவத்தின்மீது, பணிகண்மிகப் பூட்டியலங்கரித்தலொக்கு மவர்செல்வம்பயன்றானம்மா. (௨)

தந்தைதாய் சோதாருற் றாரையெலாங் கைவிடுத்துத் தன்னைச்சார்ந்த, பைந்தொடியை யனையவர்போ லாதரிக்கக் கணவனுக்கே பரமாமாதி, யந்தமிலான் முதற்றெய்வம் பதியிரண்டாந் தெய்வமென வன்பினோடு, சிந்தைதனி னினைந்துருகுஞ் சேயிழைபூ வையர்க்கெல்லாந் தெய்வமாமால். (௩)

தவனட்டி யிருவரினற் குணமுளா ரிலரென்னுந் தன்மைநோக்க, னவமணஞ்செய் முன்னன்றிப் பின்னுன்னிற் பயனுளதோ நாவாய்தன்னை, யுவாழி நடுவினன்றன் றெனக்கை விடத்தகுமோ வுடல்பன்னோய்சேர்ந், தவயவங்கள் குறைந்தாலு மதையோம்பா தேறிவரோ வவனிமீதே. (௪)

கொழுநனு யினுமனையா யினுமியல்பில் லாரென்னிற் கூறின்சொல்லாற், செழுமைநெறி யினிற்றிருப்ப வேண்டுமிதத் தால்வசமாஞ் சினவிலங்கு, மழல்வதினுற் றுன்பமிகு மல்லாதுபயனுளதோ வருநோயுற்ற, விழிமிசைநன் மருந்திடாதழற்பிறம்பை விடிலங்நோய் விலகுங்கொல்லோ. (௫)

தந்தைதாய் சோதரரை நீங்கிமின்னு றொருவன்கை தன்னைப்பற்றிப், பந்தமுற லாலவரெல் லாரினுமிக் குரிமையுளான் பத்தாவன்றோ, விந்தநிலை யுணராம லவனையிகல் செயுமேழை யிகபரத்தை, நிந்தையுறவழித்தலாற் றன்னைத்தான்கொலைசெய்த னிகர்க்குமாதோ. (௬)

பொய்யான நாடகத்திற் பதிமனைப்போல் வேடமுற்றோர் பூண்டகன்மஞ், செய்யாரே னகைக்கிடமா முலகறிய மணவாளன் றேவியென்ன, மெய்யாவுற்றோர்தம்மு ணப்பிலரேத்

பிரபஞ்ச விநோதக் கூத்தைக், கையாற்கொண் டாட்டுவிக்கும் பரனவனை யழற்புகுத்திக் காய்வானம்மா. (௭)

பரவுசமுசாரமெனும் பண்டியில்வாழ் வெனும்பொருளைப் பரப்பிப்பூண்ட, புரவிகள்போற் காந்தனுங்காந் தையுமமைந்தார் மனமொத்தோர் போக்கைநாடி, விரவொடுமே காரொன்னி னூர்தியொடப் பொருள்விளியும் விண்புரக்கும், பரமனெனுஞ் சாரதியப் பரிகண்மேற் சினமூண்டிறப் பட்ர்செய்வானே. (௮)

உரவினரெல்லாங்கூடி மணவிழாச் செய்துரியோ னுரிமையென்னப், பெறலரும்பேர் பெற்றுமொரு வரையொருவர் பேணுரேற் பெருமை யென்னே, வறமறிவி லாவெவனினும் விடாநகைப்புற் றூண்பெண்ணு மமைந்துவாழும், பறவைமிருகங்களைப்பார்த் தாயினுநன் னேயமன்னோர் பயிலனன்றே.

தாங்குபொருள் சுட்டழித்துத் தானுமழியுங் கனல்போற் றலைவனெஞ்சைத், தீங்குகளாற் சுடுமனைவி தன்வாழ்வைக் கெடுத்தலாற் செழுங்கண்டத்திற், றாங்குதிருநாணினை லென்னபய னதைக்கழுத்திற் சுருக்கிக்கொண்டு, தேங்குமூயிர்ப் பொறைநீக்கிற் பூமகடன் பெருமபொறையுந் தீருமன்றே.

அனைதந்தை யில்லத்துஞ் சுகமில்லை நமக்குரியா ளானபின்னர், மனைதாங்கல் சூதகஞ்சூல் சேய்பெறுதல் வளர்த்தலொடு மாமன்மாமி, யினையவரை யுபசரித்தல் விருந்தோம்பனம்பணிக ளியற்றலென்னும், வினைகளினை லயர்மனையைப் பரிவுட னாதரவுசெய்ய வேண்டுநெஞ்சே. (௧௧)

தந்துணைவர் வடிவிலா மூடவரெனி னுந்திருவின் றனையனைப்பா, மந்தமுளா ரயற்குமா ரெனினும்விட மனையாமருமணாளர், வந்தமுதுண் டுறங்கியபின் றுமுண்டு துயின்றுமுன்னம் வல்லெழுந்து, பந்தமுறுஞ் சருமமெலா முடிப்பார் கற்பி னணிபூண்ட படைக்கண்ணாரே. (௧௨)

வினைப்பகைதீர் பெரியரில்வாழ் வினிற்கலந்து நின்றாலும் வேதநாதன், றனைப்பாவி னைத்தலென்று மொழியார்போற் கற்பின்மிக்க தையலார்தம், மனைப்பணிகள் செய்தாலுந் துயின்றாலுங் கனவினுந்தம் மணாளர்மாட்டு, நினைப்பொழியார் கணவருட னவர்மனமொன் றாய்க்கலந்து நிற்குமாதோ.

வந்தலாந் தந்தையைத் தாய்சகியர் கோவிலைவிட் டோரெளியர்சிற்றிற், சார்ந்தனனென் றிகழுமின்னே சிற்றில்லாலவரருகே தங்கப்பெற்றேன், சேர்ந்தமிடி யாலவர்தம் பணியாவுமென்கையாற் செய்யப்பெற்றேன், பாந்தவமீ தின்றியெங்கை தையன்னையைவேறாக்குறித் தொ பாழ்த்ததன்றோ. (௧௪)

மூதலியிவ டுணைவனே தெய்வமென்று மவன்சிற்றின் மோக்கமென்று, மதிலவனோ டுறைதல் சாலோக சாமீபமென்று மவன்கைதீண்டி, மதமொடு மேயடித்தல் சாரூபசாயுச்சிய மென்றுண் மயற்பேய் கொண்டாள், பதவியெலா மீன்றோர்பா லிருக்கண்ப டுறுமெலிந்தாள் பசிநோயுற்றே. ()

வேறு.

உண்ணல்பூச்சுட னெஞ்சுவத்தலொப்பனை
பண்ணலெல்லாமவர்பார்க்கவேயன்றோ
வண்ணறன்பிரிவினையதிற் றுந்தோழிநீ
* மண்ணவந்தனையிதுமடமையாகுமே. (௧௬)

கதிரவனனையதங்கணவரோர்முக
மெதிருறமலருமற்றேதிலார்முக
மதியநோக்கிடவிதழ்வாடிக்கூப்புமால்
சதியர்வாண்முகமெனுஞ்சலசப்பூவரோ. (௧௭)

மிடியுளார்கேள்வரென் றுரைத்தமின்னனாய்
கடிநகர்கிறுகுடில்காந்தர்வேந்தரா
மடியளேகுடியவரன்பென்செல்வமாங்
குடியிறைவென் னிறைகுறையுண்டோசொலாய். (௧௮)

---

* மண்ணுதல் - அலங்கரித்தல்.

தோழிசேஞனக்குமோர்துணைவனுண்டவன்
வாழிதயத்தினுன்மற்றமாதரைப்
பாழினினினைக்கின்றாய்பாவிநெஞ்சனைக்
ஆழிசூழுலகினிலனந்தமோசொலாய். (௧௯)

இங்கிருபொருள்வயினேகுவேனென்றீர்
தங்குவதுடலொன்றேதளர்நெஞ்சோடியி
ரங்குறுநாசமேயபலமெய்யிதன்
பங்கதாம்அழியுறும்பங்கதாகுமே. (௨௰)

விரியுலகழியினுமிறைகள்சூழினுஞ்
சுரிகுழர்கற்பினார்துணைவனேயமும்
பிரிவிலாவாழ்க்கையும்பெறுவரேவலர்
பரிவெலாமிரவிமுன்பனியினீங்குமே. ௨௧)

தினவினைசெயவகல்செல்வமுன்னந்து
தனம்வருமதினொடுமடைகிலாயெனின்
மனம்வருமுயிர்வரும்வாராதமெய்விலங்
கினமுறுவனமுறுமினம்வருந்தவே. (௨௨)

வேறு.

இந்தவுடலுளமைப்பொறி யின்னுயிர்யாவுமணஞ்செய, மந்
தகன்னுளிவிவில்லவட் கண்பொடவித்தனன்யாண்பொதுப்,
பைந்தொடியேயுனைச்சேர்ந்திடப்பாரிலெனக்குடல்வேறில்லை,
சிந்தைபுலன்களும்வேறில்லை சீவனும்வேறில்லைசெல்வையே.

வேறு.

அந்தநாணடந்திலாதயானகன்றநெடுவழி
யெந்தவாறுசென்றதென்னவெனைவினவு * சிலதிகேள்
பந்தவூர்தியேறியேபடர்ந்தனன்படர்ந்தநாள்
வந்தபீழையாவுமன்பர் * மந்தகாசந்தீர்த்ததே.

---

* சிலதி - தோழி. * மந்தகாசம் - புன்னகை.

திருவனையெனப்புகழ்ந்துதேவியைவிளிக்கமா
மருமலர்துறந்துநெஞ்சின்வாழ்ந்ததென்னவழுதன
ளுருவமாதையொப்புறைக்கவழுதுவாடுநங்கையா
முருவமாதர்பெயருரைக்கினுயிர்துறப்பணெஞ்சமே. (௨௫)

பூணலங்கன்மார்பினுரையன்றிவேறுபுருடனைக்
காணநோக்கிலேனினைந்துகழறநெஞ்சுவாயிலேன்
பாணவேறுபொதியிலேனைநடனம்பார்க்கவாவென்
காணமின்றியேயுரைத்தநண்பர்வம்பரேகொலாம். (௨௬)

வேறு.

ஓவியர்நீள்சுவரெழுதுமோவியத்தைக்கண்ணுறுவான்
றேவியையாமழைத்திடவான்சித்திரமேனுன்பாரேன்
பாவையர்தம்முருவெனினீர்பார்க்கமனம்பொறேனென்றாள்
காவிவிழிமங்கையிவள்கற்புவெற்பின்வற்புளதால். (௨௭)

திருவென்னவெனநினையார்சிர்சேடியெனநினைந்து
பொருள்வயினேகிடச்சிவன்போல்வாரேயுன்னுதலா
லொருதாமோபலதாரநீயோவக்காளக்காளென்
றிருவினையேன்றனையழைத்தலிழுக்கன்றுபைங்கிளியே. ()

நள்ளிரவிற்றமயந்திநளன்றனையேபுரிந்தபின்னும்
தெள்ளுயிர்நீங்கிலளென்னக்சேடிநீபொய்யுரைத்தா
யுள்ளுயிரேபத்தாவாவுடையகற்பினார்க்கவன்றான்
றள்ளியகன்றால்வேறுதனியுயிரேதுரையாயே. (௨௯)

நரபதிநீயானலுநண்பரின்பாதத்துகட்குன்
சிரமகுடமிகாரமோசேர்கிலையேற்கொல்வனெனக்
காவாளையுருவிநின்றாய்கற்பினுக்கோர்குறையின்றித்
தாமாநீயெனைக்கொல்விற்றந்தையாய்குருநீயே. (௩௰)

அன்பருண்ணிலென்பசிபோமவர்களிக்கயான்களிப்பேன்
றுன்பமவருறில்யானுந்துன்புறவேனாதலினு

ரென்புடல்வேறெனினுமெமக்கின்னுயிரொன்றெனவறிந்தே
ன், பின்பவர்தாமென்னைவிட்டுப்பிரிவதெவ்வாறுரைசகியே.

பொன்னகையிலாயெனச்சொல்பொற்றொடியே பரத்தையர்
க்கே, யந்நகைகளுரியவையாமச்சநாணமடம்பயிர்ப்பு
மின்னகையாங்கற்பினர்க்குமேதினியுநீசொலுமப்
புன்னகையுநண்பரினோர்புன்னகைக்குநிகராமோ. (௧௨)

செழுமுளரிபுன்னீங்கிற்செழிக்குமோபடர்கொடிகள்
கொழுகொம்பைப்பிரியின்வளங்கொண்டுய்யுமோகணவ
ரழுதயரவைதாலுமாங்கவையலவியற்றிடினுந்
தொழுதகுகற்புடையார்தந்துணைவரைவிட்டகல்வாரோ.

பேதைமதியுற்றனையென்றெனையிகழும்பெருந்தகையென்
காதலியைப்பிரிந்திந்தக்காயமென்றேயுயிருநெஞ்சு
மக்தவள்பாலுறையுமன்னுண்மனமுயிரென்பாலுறையு
மாதலினான்பேதைமதியாயினனென்பதுநிசமால். (௧௪)

உரனுடைமாமதுசையினையுலகமெலாந்துதித்தாலும்
பெருமிதங்கொள்ளுமறியாப்பேதையெனுநந்துணைவி
யொருசிரக்கம்பிதஞ்செய்யினுடலெலாம்பரவசமாம்
பருவமதிற்சிறியாளிவ்வசியமெவண்படித்தனளால். (௧௫)

வேறு.

வினையில்வென்றியிலாதிங்குமீண்டதற்
கினன்முனிந்திடுமென்றஞ்சிலேம்வசை
றனையுமெண்ணிலந்தாரந்திறவிலே
மெனநகிற்செய்வதொன்சொலிதயமே. (௧௬)

இரிஞராலுறுமெவ்வமுந்தேகமார்
பெரியபுண்களும்பேசருந்துன்பமு
முரிமைவாண்முகநோக்கவொழிதலாற்
பிரியைநோக்கம்பெருமருந்தாமரோ. (௧௭)

எளிலி லாளில் லவனெனும் வேசிசேர்ந்
மொழிமுகத்தை மதியைமுன் னுன்முகன்
சுழிதாசினிற் றாக்கத்தட் டோடும்ப
ரெழுநி சாபதி யின்னுமிங் கெய்திலான். (௧௮)

௧௧-ம் அதிகாரம் புருடபாரியரியல்பு முற்றுப்பெற்றது.

ஆக அதிகாரம் ௧௧-க்கு திருவிருத்தம்-௱௪௰.

12-ம், அதிகாரம்.

விபசாரம்.

பண்டோரான் பெண்ணமைத்தவ் விருவருக்கு மணமியற்
றிப் பாணிர்க்கங், கொண்டளித்தமுறைகடந்து கள்ளவழிப்பு
ணர்ச்சிசெயுங் கொடியோர் தம்மை, மண்டலமே வாய்பிள
ந்துவிழுங்காயோ வவர்தலைமேல் வானுலாவுங், கொண்டலே
பேரிடியை வீழ்த்தாயோ விதுசெய்யிற் குற்றமுண்டோ. (௧)

வேறு.

ஒருவரு மறிகிலா ரெனவோ ரொண்ணுதல்
காவயற் குமாரை கலத்தல் பூசைதன்
னிருவிழி மூடிமற் றெவர்கள் பார்வையுந்
தெறிகிலா தெனப்பயன் றிருட லொக்குமே. (௨)

அன்னிய ரெம்மியை யன்றிச் சேர்ந்தன
ரன்ன மிடையவ ரியம்பல் சோரர்கள்
பொன்னையாம் வவ்விலேம் பொருள்வந் தெங்களை
முன்னை வவ்வியதென மொழித லொக்குமே. (௩)

மனமகிழ் வாயயன் மைந்தர் தம்மொடுந்
தினமுறை யாடிடுந் தெரிவை கற்பது
புனலுறு முப்பினைப் போலு மெனமெழு
கனலுற லென்னவு மழிவ துண்மையே. (௪)

வலதுகை துணைவனா மற்றோர் கைடினை
தலைவன்செய் தொழிலெலாந் தார மாற்றுத
றொலைவிலா வலக்கையின் றொழி லிடக்கர
நிலமிசை செய்தென நிந்தை மேவுமே. (௫)

உண்டவர் தமைக்கொலு மோத வெவ்விட
மண்டினோர் தமைக்கொலு மாளிகை யினாற்
றண்டினோர் தமைக்கொலுஞ் சற்பந் தையலார்
கண்டவர் நினைப்பவர் தமைக்கொல் காளமே. (௬)

நிலையில் சிற்றின்பத்தி னேயத் தாற்றின
மலைவுசெய் பவந்தனை யாற்றல் கொள்ளியாற்
றலையினைச் சொறிதலுந் தகிக்குந் தீயினை
யெலியினுக் கஞ்சியில் விடலு மேய்க்குமே. (௭)

மின்னெறி மூட்டிடு விறகுபோற் சுவைக்
கன்னலைப் பழித்தசொல் லாரைக் காணலுந்
துன்னனு முன்னலுஞ் சுடுவெங் காமத்தீ
தன்னையே மூட்டிடுஞ் சமிதை போலுமே. (௮)

உணர்வழிஞ் செல்வமு முயர்வு மேயறுங்
குணமறுங் குலமறுங் கொடிய நோயெலா
மணவுறு நரகுறு மாயுடேயு மால்
கணமறு மாதர்தோள் கலக்குந் தூர்த்தர்க்கே. (௯)

வேறு.

உவந்து தன்னுள்ளத் தோங்கிய கற்பிலாச்
சிவந்த வாயுடைச் சேயிழை யைப்பதி
யிவர்ந்து சேமஞ்செய் தெய்க்குதல் பட்டிகள்
கவர்ந்த பின்பொருட் காவலை யொக்குமே. (௰)

ஒயப்பாரி லுறுந்தெவ்வர் தம்மொடு
மேயப்போரி லெதிர்ந்திட வென்றியா

மாயப் போர்செய் மடந்தையர்க் குப்புற
மாயப் பாற்செல வென்றி யமையுமே. (௧௧)

வேறு.

கொழுநன்றியி லுயிர்க்கொலையாங் கோவாக்கினையாம் பெ
ரும்பழியா, மழல்போ னெஞ்சைச் சுடும்பயத்தோ டயலாட
வனையொருபேதை, தழுவியின்ப முறன்மதமா தானுண்டக
ல்வாயிடையொழுகுங், கழையின்சாற்றை விழைந்ததன்பாற்
கடுகிநக்க லேய்க்குமால். (௧௨)

வேறு.

மற்றொரு வினைச்சேர் மாதிறத்தாலும் வசைநிற்குமுலகமு
ள்ளளவுஞ், சுற்றமும் வாழ்வுந் துணையுமே நீங்குஞ் சோரநாய
கனுமே மதியான், பெற்றசந்ததியு மிழிவுறுமாண்ட பின்ன
வியாவெனநரகஞ், சற்றுநோங்கொள் சுகத்தினால் விளையுந்
தன்மையீ தரிவையீருணர்வீர். (௧௩)

வேறு.

ஓர்பிழை குருவேசெய்யி னொன்பது பிழைகள்செய்ய
நேர்சிறு சீடனென்ன நிதம்பதி பலமின்னார்தோள்
சேர்வது காணுமில்லா டினம்பல புருடர்சேர்தல்
சீரெனவுன்னி யன்னான் செலவுபார்த் திருப்பண்மாதோ. ()

தன்னைப்போற் பிறரையெண்ண றகுதியான் றான்மணந்த
மின்னைப்போ லிடையினாளை விழியினா னோக்குவோரைத்
தின்னல்போன் முனிவுகொள்வோ ரயலவன் றேவிதன்னை
யன்னசோ தரிபோலண்ணா தணைந்திட விருப்பலென்னே. ()

௰௨-ம் அதிநாரம் விபசார முற்றுப்பெற்றது.

ஆக அதிகாரம் ௰௨-க்கு திருவிருத்தம்-௱௫௫.

13-ம், அதிகாரம்.

உயர்ந்தோர்தாழ்ந்தோறைத் தாங்கல்

——(*)——

வாழகமும்புனை தூசணியும்பலவாகனமஞ்சமொடுஞ்
சூழ்பொருளுஞ்சுவைசோறுதுங்கமழ்சோலையுமாசுகமுங்
கீழவராலவர்தாமிலரேன்மிகுகேவலமாயுலகம்
பாழதுவாமதனாலருடானவர்பாலுறுவாய்மனனே. (௧)

வேறு.

நாதனே யுயிராந்தந்தை நரரெலா மன்னுஞ்சேயர்
பூதலப் பொருள்கள் யார்க்கும் பொதுமையல்லாதுசொந்தச்
சாறனைப் பொருள்போற் செப்புச் சாதனம் பெற்றோரில்லை
யாதலிற்றாழ்ந்தோர்தம்மையருஞ்செல்வர்தாங்கண்மாண்பே.

நயமறங் கல்வியின்றி நனிநிதியாற் குலத்தால்
வயதினாற் பெரியரென்னன் மைந்தர்தந் தையின்றோளேறி
யியலித்தாம் பெரியோரென்ன வியம்பலுங் காலமாலை
யுயர்நிழ லுள்ளோர்தம்மை யுயர்ந்தவ ரெனலுமொப்பே. (௩)

ஏவிராட் டினவூசற்க ணேறியே சுற்றங்காலை
மேலவர் கீழுங் கீழோர் மேலுமாய்ச் சுழலல்போல
ஞாலமீ தின்றுயர்ந்தோர் நாளையே வறியராவர்
சீலநெஞ்சினர் கீழோரைச் சினந்திக ழார்கண்மாதோ. (௪)

மக்கள்யாவரு மோரன்னை வயிற்றிடை யுதித்தலாலிச்
சக்கரந்தனி லெல்லாருஞ் சகோதர ராவர்சீரின்
மிக்கவர்தாழ்ந்தோரென்னல்வெறும்பொய்யாமேன்மையென்
தொக்கவேபிறப்பிறப்பிலுறுங்கொலேவுரையாய்நெஞ்சே. [ப

* சிலதரு நரரேயங்கஞ் சீவனெஞ் சவர்க்குமுண்டா
நலநவை யின்பதுன்ப நானிலத் துளவவர்க்கு

* சிலதர் ஏவல்செய்வோர்.

நிலமிசை யவரைச்செய்தோ னித்தனே யவரையேதும்
புலனிலாப்பொருள்போலெள்ளும்புல்லர்வீடில்லர்மாதோ. ()

கொற்றவர் நார்க்குழைத்துக் கூலியா மிறையைக்கொள்வர்
மற்றவ ரெவருந்தம்மெய் வருந்தவே யுழைப்பர்செல்வம்
பெற்றவர் களுமுழைப்பர் பின்னவர்க் குழைப்பர்சேட
ருற்றவித் தன்மையுன்னி னுழையாரார் தலைவாரே. (௭)

உடலுறுப் புகண்மேல்கீழென் றுன்னிடா தோம்பல்போலுந்
தடமலை கொண்டநீரைத் தாழ்தரைக்களித்தல்போலுந்
தொடர்புறுமேலோர்தங்கைத்தோய்நிதி யாவுந்தாழ்ந்தோர்க்
கிடவெனக் கடவுளீந்தா னெனநினைந் திடுவர்மாதோ. (௮)

என்றுமெய் வருந்தவேலையியற்றுவோர்க்குயர்ந்தோர்சொற்ப
பொன்றனை யீவர்கெட்டுப் புரிகின்ற வணிகரென்ன
வொன்றுகொண் டொன்றையீவோருழையரிற்றாமுயர்ந்தோ
ரென்றுகொள்ளென்னந்திண்ணமென்னலெவ்வண்ணமம்மா,

ஒளிமுடி யொடும்பிறந்தே யுலகமாண் டவரு மில்லை
யெளியரா யோடொன் றேந்தி யிங்குதித் தவருமில்லை
குளிர்கட லுடுத்தபாரிற் குறைந்தவர் மேலோரென்னல்
வெளிமயக் கன்றிச்சற்று மெய்யல வுணர்வாய் நெஞ்சே. (௯)

உயர்ந்தோர் தாழ்ந்தோரைத் தாங்கல்
முற்றுப்பெற்றது.

ஆக அதிகாரம் ௰௩-க்குத் திருவிருத்தம்-௱௬௫.

14-ம், அதிகாரம்.

தாழ்ந்தோ ருயர்ந்தோர்க் கடங்கல்.

விரிசுடர்க்கதி ரோன்மதிதாரகை விலங்குபக்கி மாமலை
யாவினும், பெரிதுசின்னதென் றாகியதன்மைபோற் பிழை

யிலான்வகுத் திட்டவுலகிய, றிரிதவின்றி நடப்பதற்காகவே சிறியர்மேலவ ரென்னவிங்காயினு, ருரியவிம்முறை யின்படி தாழ்ந்தவ ருயர்ந்தவர்க்குள் ளடங்கலொழுக்கமே. (க)

௰௪-ம் அதிகாரம்.

தாழ்ந்தோருயர்ந்தோர்க்கடங்கல் முற்றுப்பெற்றது.

ஆக அதிகாரம் ௰௪-க்குத் திருவிருத்தம்-௱௬௬.

15-ம், அதிகாரம்.

பொய்.

முன்னமோர்பொய்யுரைக்க வப்பொய்வெளியாகாமன்மூடு ம்வண்ணம், பின்னுமோர் பொய்யுரைக்க வதையுநிலை நிறுத் தவோர்பெறும்பொய்சொல்ல, வின்னவகைகைதவமொன்றி ருநூறு கைதவத்துக் கிடமாம்வாய்மை, தன்னைமுன்பகரிற்ச ங்கடமொன்றிலையதுவேதகைமைநெஞ்சே. (க)

இழுதைசொல்லி மறைக்கலா மெனுந்திடத்தாற் பாதகங்க ளெல்லாந்தீயர், பொழுதெலாம் புரிதலாற் குற்றங்கள்யாவுக் கும்பொய்பிதாவாம், வழுதொன்றை நீக்கிடிற்றீ வினைகளெ லா நீங்கிடுநல் வண்மையொன்றே, முழுதுமுணர் றிஞர்க்குத் தோழனு மவர்க்கதனுன் மோசமுண்டோ. (உ)

அங்கதமே பொருளென்னக் கைக்கொண்டோர் மறந் தொருமெய் யறைந்திட்டாலு, மிங்கதனை யெவருநம்பார் து ணைவியர்புத்திரர்தமரு மிகழ்ச்சிசெய்வா, ரங்கணுலகெங்கணு மேவசையாகுநரெலா மகிதராவார், பங்கமுறும் பொய்யறை ப்பொய்யருஞ்சேரார் தம்முளமும் பழிக்குமன்றே. (ங)

ஏதேனும் பயன்வேண்டிப் பொய்சொல்லினப்பொய்தா னெவ்விதத்து, மாதரையில்வெளியாகு மப்பொழுதப்பயனழி யும் வளருந்துன்பஞ், சாதலின்மைவேண்டிவிடமுண்ணலொ

க்கும்பயன்கருதிச்சலமுரைத்த, லாதலினுலுண்மைதனைத்து ணைக்கொள்ளி னெப்பயனு மடைவோநெஞ்சே. (ச)

மெய்யரெனப் பெயர்பூண்டார் வறிஞரே யெனினுநிதி மிகவுமன்னுர், கையதனிற் கொடுத்துவைக்க வெவருமஞ்சா ர் பொய்யரெனக் கவ்வைபூண்டார், செய்யபொருண் மிகவு ளா ரெனினுமவர் கையிலொரு செல்லாக்காசு, மையமின்றி யொருவர்கொடா ரெனிற்படிறின் றன்மைதனை யறைவ தென்னே. (ரு)

விலங்குபற வையினுநரர் வாக்கொன்றாற் சிறப்புடைய ர் விளங்குந்திண்மை, யிலங்குவா யாலுரையா தவத்தமுறை ப் போருலக மிகழ்விலங்கின், குளங்களினுங் கடையாஞ் சா்ணமதை யமுதுவைக்குங் கோலச்செம்பொற், கலங்களி ன்வைத் தலையொக்கு மெய்க்குரிய வாயாற்பொய் கழறலன் றே. (சா)

பழியிலா ரொருவர்க்கு மஞ்சாது நேர்வழியே படர்வார் வவ்வுந், தொழிலுளார் பகற்கஞ்சுந் துரிஞ்சில்போ விட்டி கையிற் றொடர்ந்து செல்வா, ரிழிவுளா ரென்பதற்குப் பொ ய்த்தலே சான்றாகு மேசிறாய, வழிவுளா ரென்பதற்குச் சா தமே சாட்சியா மகியின்கண்ணே. (எ)

அயலார்செய் குற்றங்கள் கூறுமன் மறைதலே யறமா மன்னர், துவருரு வண்ணநாம் பொய்த்தாலும் பிழையன்று சொந்தமாவோர், பயன்வேண்டிச் சிறியதோர் பொய்சொலி னும் பெரும்பழியாம் பார்மேல்கீழா, யயர்வாகப் புரண்டாலு ம் பிறர்க்கின்னு தரும்பொய்யை யறையாநெஞ்சே. (அ)

பாரினிற்பொய்த் திடல்பொய்க்க வுன்னுதல்பொய் யி னைப்பிறர்க்குப் பயிற்றல்யாதோர், காரியஞ்செய் வேனென் னச் சொலித்தவிர்த றனக்கேலாக் கருமந்தன்னை, வீரியமா ய்ச் செய்வனென லற்பமையே துதித்தல்பொய்யை வியந்து

---

* துரிஞ்சல் - வெளவால்.

கொள்ளல், சீரியரை யிகழ்தல்பிறர் மீதொருவன் சொலும் பழியைச் செவியிற்கோடல். (௯)

தற்புகழ்தல் புறங்கூறன் மிக * விருணம் வாங்குதல் பொய்ச் சான்றுரைத்தல், பற்பலவாக் கட்சாடை சிரகாகம் பிதஞ்செய்து பசுமைபொய்போற், பிற்பயன்றூன் றிடச் செய்தன் மெய்யுரைக்க வஞ்சிவாய் பேசிடாமற், சற்பனை யா யிருத்தல்பொய்க் கதைகூறல் கேட்டலெலாஞ் சலங்களாமே.

வியனுல கெங்கணும் வீற்றிருக்கு மோர்
வயமுள்ளான் முனிவிற் கஞ்சாது மாக்கட்குப்
பயமொடு மறுத்தமே பகர்தறே வினுங்
கயவுளார் நரரெனக் கருதல் போலுமே. (௧௧)

௧௫-ம் அதிகாரம் பொய் முற்றுப்பெற்றது.

ஆக அதிகாரம் ௧௫-க்குத் திருவிருத்தம் ௧௭௭.

16-ம், அதிகாரம்.

களவு.

களவுசெய்குதன்மனத்தினினினைக்குதல்கவரென்
றுளமகிழ்ந்துபதேசித்தலுதவிசெய்தொழுகல்
வளமிலாப்பொருண்மாறுதன்மிகுவிலைவாங்க
லளவினுந்நிறைதனினும்வஞ்சித்தபகரித்தல். (௧)

கண்டெடுத்தவோர்பொருளனுபவித்தலுங்களவின்
பண்டம்வாங்கலும்வாங்கியகடன்கொடாப்பழியு
மண்டும்வண்பொருளாசையாற்பொய்வழக்கிடலுந்
தொண்டுசெய்பவர்கூலியைக்குறைக்கின்றதொழிலும். (௨)

* இருணம் - கடன்.

நட்டமேபிறர்க்செய்திடச்செய்தலுநம்பி
யிட்டர்வைத்தநற்பொருளபகரித்தலுமிறப்ப
வட்டம்வட்டிகள்வாங்கலுஞ்சூதிற்பொன்பெறலு
மிட்டவேலைசெய்யாதுகைக்கூலிகொள்ளியல்பும். (௩)

கன்னம்வைத்தல்செல்லாப்பணம்வழங்குதல்கள்ள
மன்னுசீட்டையுண்டாக்குதல்கைலஞ்சம்வாங்க
லென்னும்யாவுமேகளவதாமித்தொழிற்கியைவோர்
மன்னராக்கினைவசைநரகறைந்துவாடுவரால். (௪)

திலகவாணுதற்றேவியைச்சேயரைப்பிரிந்து
கலகலென்னவேவிலயாலிசெய்மாவிலங்குகாற்பூண்டில்
வுலகமேசிடச்சிறையகத்துற்றுமண்சுமந்து
சிலுகெலாமுறல்சிறிதுபொன்றிருடலாலன்றூ. (௫)

தள்ளரும்பெரும்பழியுளாரென்னினுந்தரையி
லெள்ளல்சேரிழிகுலத்தரேயென்னினுமேசிக்
கள்ளரென்றவர்ப்பழித்திடப்பொருரெனிற்களவிற்
குள்ளபோவமானத்தையுரைப்பதென்னுளமே. (௬)

வேறு.

அரிமுழநுழைதல்போலவயலகம்புகும்போதச்சம்
பொருடிருடும்போதச்சம்புறப்பட்டேகுங்காலச்சந்
தெருவினிலெவர்க்குமச்சங்கவர்ந்தனதிளைக்கவச்ச
முருமுருக்கொண்டுகள்வருளங்குடிகொண்டபோலும். (௭)

நிரந்தரம்பலநோயுற்றுநெடிதயரினுங்கையேந்தி
யிரந்துணப்பெருநிரப்பேயெய்தினும்பகரவொண்ணு
வரந்தைசூழினும்பொன்வவ்வுமத்தொழிற்கியையாவண்ணம்
வரந்தாவேண்டுமென்னக்கடவுளைவருத்தாய்நெஞ்சே. (௮)

௧௬-ம் அதிகாரம் களவு முற்றுப்பெற்றது.

ஆக அதிகாரம் ௧௬-க்குத் திருவிருத்தம்-௧௮௫.

17-ம், அதிகாரம்.

கொலை.

உயிரினைவதைத்திடல்வதைக்கவன்னுத
லயிலெனக்கொடியசொல்லறைதலெற்றல்வெண்
டயிருடைமத்தெனத் * தாபம்பல்புரிந்
தயலவராயுளட்கழிவுண்டாக்குதல். (௧)

சருவினையழிக்குதல்கயமிங்கோனையார்
மருவிடவிரும்புதன்மற்றஃனேரிட
றொருவிடவரைசெயாதொழிதல்வெவ்விடஞ்
* சருவினிலிடர்கொடுஞ்சமர்க்குடன்படல். (௨)

முனைவுட்காமம்வெம்முரண்முதற்கொலை
வினையினுக்கேதுவாம்வினைக்கடைந்திடன்
மனையினிற்றீயிடன்மண்ணிற்றக்கொல
வினையயாவிங்கொலையென்னும்வேதமே. (௩)

பெறலருமுயிர்தரும்பிறப்பிலானதை
யறவொருவழிசெயவாண்மைபூண்டனன்
பறவையைநார்விலங்கினைப்படுக்குமோர்
வறவனுக்குலகெலாமறவியென்பவே. (௪)

கொலைபுரிவோரையுங்குடிவருந்தவே
யலைவுசெய்பவரையுமாவிநீக்கிடத்
தலைமுடிதரித்தவர்தமக்குநீதியா
மிலைகொலைசெயுமுறை * யிதராரர்க்குமே. (௫)

சுதமுறுமுகத்தொடுசொல்லுமாற்றமும்
பதமுறு * கறைக்கறைபடிந்தவாடையும்
வதனையேகாட்டலால்வதைமறைக்குத
லுதவனைக்காத்தினுன்மறைத்தலொக்குமே. (௬)

மவமறமாயினும் ¶ பவர்க்கமுத்தியாய்ச்
சிவமுறப்பொலியினுஞ்சிதைந்தழிந்தவோர்
சவமுயிர்மேவினுந்தகையில்காதக
ரவனியிலுயர்ந்திடலரிதுநெஞ்சமே. (௭)

பத்தினிசேயரும்பரிசனங்களுந்
தத்தமகிலைகெடத்தலைவனைச்சம
னுத்தவனியிற்கொலலொருவன்றன்னையன்
றத்தனைபேரையுமடுதல்போலுமே. (௮)

தீயிடைமூழ்கினேன்சிங்கியுண்டவன்
மாய்விலாதுய்யினும்வதனுய்யானம
னுயதன்றொழில்புரிவோனையன்பொடு
மேயதன்னுலகினுக்கீண்டழைக்குமே. (௯)

சீவனைவதைசெயல்சிறந்ததாயுங்காற்
பாவமோரைந்தினுங்கொலைசெய்பாவியைப்
பூவலயம்பொருதெரியும்பூதிதா
னுவெனவாய்திறந்தவனைநுங்குமே. (௰)

கஎ-ம் அதிகாரம் கொலை முற்றுப்பெற்றது.

ஆக அதிகாரம் கஎ - க்குத் திருவிருத்தம் - ககூரு.

18-ம், அதிகாரம்.

மது.

ஞானமெய்ச்சுகம்புகழ்நலம்பெறத்தனந்
தானமேசெய்குவர்தகுதியோரறி

---

* தாபம் - துன்பம். * சரு - சோறு.
* இதரார் - அன்னியர். * கறை - இரத்தம்.
* வதன் - கொலை. * பவர்க்கம் - நரகம்.

வீனமெய்மறதிநோயிழிவுறப்பொருள்
வானெனவழங்குவர்மதுவுண்போர்களே. (௧)

மருந்தநேர்மதுவுண்போர்மாண்டபான்மையா
லருந்தவப்பாலருக்கப்பனில்லையால்
பொருந்தியமனையவள்பூண்டநாண்களத்
திருந்ததேயென்னினுமிழந்ததொக்குமே. (௨)

சித்தமுமவசமாஞ்செயல்விகற்பமா
மித்தமுமரணமாநெடியதுன்பமா
மத்தமுநாசமாமவிழ்தமின்மையாற்
பித்தினுநஞ்சினும்பெரிதுகள்ளரோ. (௩)

பாவினைத்தேனையின்பாகைநீத்துவெண்
மாலியைமாந்துவோர்மலர்க்கணீத்துமெய்த்
தோலிரணந்தனைச்சூதகந்தனைக்
கோலியுண்டுவக்குமீக்கூட்டமொப்பரே. (௪)

சீயெனவிகழ்தருதேனுண்போர்களை
நாயெனக் * கோகெனவாக்குநாடொறு
மாயினைமகளையில்லாக்குந்தான்கொண்ட
சேயிழையையும்விலைசெய்யச்செய்யுமால். (௫)

மலந்தனையமுதெனமாந்தச்செய்திடு
மலர்ந்தபூவெனவனலள்ளச்செய்யும்வெஞ்
சலந்தரும்பசைவர்கைதனக்குள்ளாக்குநன்
னலந்தனையழித்திடுநறவுநெஞ்சமே. (௬)

அலருறவீயெறும்பாவதேளொடும்
பலவிலங்கனுகுறப்படுத்தபாயலின்
மலசலவாந்தியுமயக்குங்கோடவா
னிலமதினரகயாகிதங்கள்ளுண்பர்க்கே. (௭)

* கோகு - கழுதை.

கொஞ்சமுஞ் சுவையிலை குளத்தைக்கோணியே
நஞ்சென நுகர்வர்மெய் நலிய மூப்புற
விஞ்சிய வாவறீ வினைகள் யாவுமே
குஞ்சுகள் கள்ளெனுங் கொடிய பக்கிக்கே. (அ)

வேறு.

வூறுமையாய் களவுசெய்வர் மையலாற் காமத்தாழ்வர்
குறுமைசேர்பகையினல்வெங்கொலைசெய்வர் வசையினேடுஞ்
சிறுமைதந் துயிரிருந்துஞ் செத்தவராக்கி யிம்மை
மறுமையை யழிக்குங்கள்ளை மருந்தலெப்பயன் வேட்டம்பா. ()

வேறு.

நரிநாய் பறவைசூழ வழிநடுவிற்கிடந்தசவமதனை, யுரியா
ரிலரொன் றிடுகாட்டுக் குடன் கொண்டேகிக்கட்டையில்வைத்
த், தெரியார் நின்றேன் பிணம்விழித்திஃ தின்றேன் மயக்கெ
ன் றியம்பி மெய்கொ, ளரியையவிக்கு முன்னமெழுந் தயற்க
ட்கடையுட் புகுந்ததுவே. (௰)

௰அ-ம் அதிகாரம்-மது
முற்றுப்பெற்றது.
ஆக அதிகாரம் ௰அ-க்குத் திருவிருத்தம்-௩௱௫.

19-ம், அதிகாரம்.

சூது.

வித்தமே மிகுமெனா வெஃகிச் சூதினி
லத்தமா ரத்தமு மழித்த நீட்டிய
சித்திரமாதெழி னம்பிச் சேர்ந்ததற்
பத்தினி தனையகல் பான்மை யொக்குமே. (௧)

வையமேன் மானிடர் வாழுநாட்சில
வையமில் கேள்விதா னளவி லாருயி

ருய்யநல் வினைகளை யுஞற்றிடாது நான்
பொய்யமர் சூதினிற் போக்கல் புன்மையே. (௨)

ஒசரு விசையொடு மோடுநா ளென
மேதையர் தந்தொழில் விடாது செய்குவர்
போது நீட்டித்தெனப் பொறியிலா ரதைச்
சூதெனும் வாள்கொடு துணிக்க நேர்வரே. (௩)

வளமலி நிடதநா டளிக்கு மாண்புசேர்
நளனையு மலைவுசெய் நாசச் சூதுதான்
மளவுபொய் சினம்பகை காம மியாவையு
மளவறப் பயிற்றிடு மையன் போலுமே. (௪)

கவறினை யாடுவோன் காந்தை வீயினுஞ்
சவமதிவ் வழிசெலு மென்று தானெழா
னவள்புனை தாலிபந் தயத்துக் காமென
வுவகை பூத்தாடுவா னுயர்வுற் றுனரோ. (௫)

வேறு.

ளட்டமானில மீதுமன்னர் விட
மிட்ட பாலை யினிதளித் தாலெனக்
கட்டமேவுங் கழகத்தில் வென்றுகொ
ளொட்டங் கையினி லொட்ட மளிக்குமால் (௬)

* இவறலேதந் திழிவையுந் தந்துபின்
றவறி யாவையுந் தந்துநெஞ் சந்தனைக்
கவறென் னேவிக் கலக்கங் கொடுத்தலாற்
கவறெனும் பெயர் காரண நாமமே. (௭)

௰௯-ம் அதிகாரம்-சூது
முற்றுப்பெற்றது.

ஆக அதிகாரம் ௰௯-க்குத் திருவிருத்தம்-௨௱௰௨.

* இவறல் ஆசை.

20-ம், அதிகாரம்.

பரிதானம்.

வலியினலி லஞ்சங்கொள் மாந்தர் பாற்சென்று
மெலியவர் வழக்கினை விளம்பல் வாடிய
வெலிகண் மார்ச்சாலத்தி னிடத்து மாக்கள் வெம்
புலியிடத் துஞ்சரண் புகுத லொக்குமே. (௧)

அல்லினிற் களவுசெய் பவரை வெஞ்சிறை
யில்லிடும் பண்பினுக் கியைந்த மாக்களே
யெல்லினி லெவரையு மேய்த்து வவ்வலாற்
கொல்லினும் போதுமோ கொடியர் தம்மையே. (௨)

கொலைஞருஞ் சோரருங் கொடிய வஞ்சரு
நிலைபெற வவர்கையி னிதியைக் கொண்டுதண்
ணலைகட லுலகிய லழிக்குந் தீயர்பான்
மலையெனப் பாவமும் பழியு மண்டுமே. (௩)

பயிரினை வேலிதான் மேய்ந்த பான்மைபோற்
செயிருற நீதியைச் சிதைத்தோர் தீயன்சாண்
வயிறினை வளர்ந்திட வாங்கு மாநிதி
வெயிலுறு வெண்ணெய்போல் விளியு முண்மையே. (௪)

ஆசையால் வாங்கிடு மவனை யீந்தவர்
கேசமா மதிப்பர்க் கீணன் சென்னிதம்
மாசன மாக்குவ ரடிமை நானெனச்
சாசன மவர்க்கவன் றந்த தென்னவே. (௫)

காசதி கந்தனைக் கருதிவா தந் தீர்த்
தேசுற வேழைசட் கிடர்செய வோன்றன
மீசாங் குறைவுபா ராதுமே விடுந்
தாசிய ரினுமிழி தகவுளா னன்றே. (௬)

எனதின தெனவொரு பொருட் கிரண்டுபேர்
சினமொடு வாதித்தோர் தீயன்பாற் செலிற்
றனதென வப்பொரு டனைக்சொள் வானவர்
மனதொரு மித்ததை வகிர்தன் மாண்பரோ. (௭)

பசியினு லெள்ளியனோர் பகலிரப்பினு
* மசியுறு மெங்கணு மாக்க முள்ளவர்
நிசிபகல் பலரிட நிதமுமேற் கின்ற
வசையினைச் சொல்லவோர் வாயும் போதுமோ. (௮)

பெற்றவன் கைப்பொருள் பிள்ளைக் கேயலான்
மற்றவர்க்கில்லயனன் மனுவி னீதியாங்
குற்றமே விடநிதி கோடிபேர் கையிற்
பற்றுவோ னவர்க்கெலாம் பாலன் போலுமே. (௯)

வே று.

மண்டலீகன்றன் றண்டனை நரகவ மானங்
கண்டபேர்க் கெலாம் பயன்பெரும் பகையொடுசெவ்வை
பண்டமிவ்வகை யீட்டலி னனுதினம் பலரை
யண்டிமானமாத் தொண்டுசெய் துயிருயலழகே. (௰)

வே று.

இருவரிடத்தும் விவாதநிதிக் கிரட்டிகொள்வர்தகாதென்னி, னருண்மசய மென்பார்தோல்வி யடைந்தோன் றந்தநிதி கேட்பின், வெருவ வவன்மேற்பொய்வழக்கைமெய்பேசற்கற்பித்திடரிழைத்துச், சருவகொள்ளை யடிப்பர்பரி தானம்வாங்கும் பாதகரே. (௰௧)

உ௰-ம், அதிகாரம்-பரிதானம்.

முற்றுப்பெற்றது.

ஆக அதிகாரம்-உ௰-க்குத் திருவிருத்தம்-உ௨௫.

* அசி-அவமதிச் சிரிப்பு.

21-ம், அதிகாரம்.

புறங் கூறல்.

சாம்பிணை மிடுவனஞ் சாருந் துர்மணம்
பூம்பொழில் பரிமளம் பொருந்தி நாறிடும்
தாம்பழி யுளரலாற் றகுதியோர் பிறர்
கோம்படி யவர்க்குறை நுவலு வார்களோ. (௧)

நலத்தின்மிக் கார்சொலார் நயமில் சொல்லையே
சொலத்தகாப் பழிபிறர் மீது சொல்லுவோன்
குலத்தினு நலத்தினுங் குறையுளா னெனத்
தலத்தவன் வாய்மொழி சாட்சியாகுமே. (௨)

உள்ளவங் கணங்கசிந் தோடல் போலொரு
கள்ளநெஞ் சினன்புறங் கழறலன்னவ
னுள்ளமார் புரையெலா மொழுகி வாய்மொழி
வெள்ளமாய் வழிகின்ற விதத்தை மானுமே. (௩)

இன்னலே யேதிலார்க் கிழைக்கு மாசொலே
முன்னமெய் யென்னினு முழுப்பொய் போலுமா
மன்னவர் குறையினை யறிந்துமின் றெனப்
பன்னுபொய் மெய்யினும் பாடுடைத் தரோ. (௪)

வேறு.

ஆட்சியாமுலகாசன்முன்
சாட்சிசொல்சமையத்தலான்
மாட்சியோர்பிறர்மறுவினை
நீட்சியாநிகழ்த்தார்களே. (௫)

மதியிலார்செய்வடுவவ
ரெதிரினின்றியம்பினு
¶ முதுகினின்றுமொழிவரோ
விதியுணர்ந்தவிபுதரே.

¶ முதுகு - புறம்.

ஒருவனொருவன் குறையையுரைத்திடவேயதைக்கேட்டோர்
பெருகபத்தங்கலந்துபலபேர்க்குரைக்கவிவ்வாரே
மருவியெங்கும்பரவுதலான்மண்ணின்முன்னன் தூறுமவன்
* குருநோயொப்பானவனைக்கோனூர்விட்டகற்றனன்றே.

௨௧-ம் அதிகாரம் புறங்கூறல்

முற்றுப்பெற்றது.

ஆக அதிகாரம் ௨௧-க்குத் திருவிருத்தம்-௩ய.

22-ம், அதிகாரம்.

பெரியோரைத்தூறல்.

அரியகுணஞ் சேர்பெரியர் தமக்கமையக் கடல்சூழ் புவன மெங்கும், விரியுமிசை மாசுறவவர்மேல் விளம்பும் பொய்ச்சொ லண்டமிசை, திரியும்பானுக் கிரணமதைத் திரட்டிப்பற்ற யதன்மீது, கரிபைப்பூச வேண்டுமெனக் கருதுந்தன்மை பொருவுமால். (௧)

காற்றினெதிரே நின்றொருவன் காறியுமிழ முச்சிட்ட, மாற்றியவன்மேல் வந்துவிழும் வாறுபோலித் தாரணியிற், றோற்றியொழியும் வாழ்வதனைத் துறந்தமேலோர் மீதொருவன், றூற்றிக்கூறும் வசைச்சொற்கள் சொன்னோன்மீதே தோயுமால். (௨)

கடலனலுற்றெரிந்ததென்றுங்கதிர்குளிர்நோயுற்றதென்றுந்
தடவரையேசாய்ந்ததென்றுஞ்சாற்றுமொழிநம்புவாரார்
திட்முடையசான்றோர்மேற்செப்புமவதூறதனைப்
புடவிமிசைவாழறிஞர்பொய்யெனவேதள்ளுவரால். (௩)

வாய்மைக்குநோயினர்க்கேமாமதுவுங்கைப்பாகுங்
காய்வெயிலுமஞ்சணிறங்காமாலைக்கண்ணருக்கே

---

* குரு - வருத்தம்.

சாய்நிழலுஞ்சுடுவெயிலாந்தாபச்சுரத்தினர்க்கே
தீயவர்க்குத்தூயவருந்தீயவர்போற்றோன்றுவரே. (௪)
கஞ்சனத்திற்றம்முகமேகாணுவதுபோற்கயவர்
தஞ்செயிலைப்பிறர்செயிர்போற்றாவமெண்ணித் தூறுவரோர்
வஞ்சகனைநம்பியொருமாசிலானின்னலொடு
மெஞ்சலுறாவண்ணமவனிழிவுரைத்தன்முறையாமே. (௫)

௨௨-ம் அதிகாரம் பெரியோரைத்தூறல்

முற்றுப்பெற்றது.

ஆக அதிகாரம் ௨௨-க்குத் திருவிருத்தம்-௨௩௫.

23-ம், அதிகாரம்.

உலோபம்.

பொன்னினைப்புதைத்திடப்புவியைத்தோண்டுவோன்
றன்னிடந்தொட்டமண்டனையிழுத்தலா
னுன்னுடையதுநிதியுலகமேயிம்ம
ண்ணன்னுடையதுவெனவியம்பலொக்குமே. (௧)
பொன்னைமாநிலத்தில்யான்புதைக்குமேல்வையி
னன்னையேயனையபாருளிநோக்கிநற்
சொன்னமென்வாயிடைச்சொரியுமுன்றன்வாய்க்
கென்னையேயிடுவெனென்றிசைத்திட்டாளரோ. (௨)
பொலிவளந்தங்கியபுவியிற்றானுண்டும்
பலிபிறர்க்கிட்டுமேபயன்றவ்வான்பொருள்
வலியிலாப்பேடிகைவாள்கொலாணென
வலியினைமேவிய ‡ வரம்பை யேகொலோ. (௩)
நித்தியமனுபவியாதுநீணிதி
பத்திரஞ்செய்குவோன்பாரந்தாங்கவூர்

---

‡ அரம்பை - தெய்வப்பெண்.

மத்தியிற்புதைத்தகன்மாசிறாசர்க்கு
வத்திரஞ்சுமக்கும்வாலேயமொப்பனே. (௪)

செல்லவோர்போக்கின்றிச்செறிந்தநீர்கண
லில்லமேயழித்தெழுந்தேகல்போற்செல
வில்லையென்றடைத்தபொன்னெழுந்துதன்னைக்கொள்
புல்லரைக்குடிகெடுத்தகன்றுபோகுமே. (௫)

வேம்புதேனீயுமோவெயிறண்ணுகுமோ
பாம்பமுதளிக்குமோபரிவில்பூரியர்
தாம்பொதியாளெனத்தாங்கும்பொன்னினைத்
தேம்புமாதுலர்க்குளஞ்சிறந்தளிப்பரோ. (௬)

ஈகையில்லாதுபொன்னீட்டுவோன்கொண்ட
தோகையுமைந்தருந்தொலைகிலானென
வோகையாயருவிடமுணவிலிட்டவன்
சாகையேகருதிமாதவஞ்செய்வார்களே. (௭)

வேறு.

அனுபவமொன்றேபொன்னாலாயநற்பயனஃதின்றேற்
புனலிலாத்தடத்தைப்பொய்யாப்புயலினைப் பொருவுமப்பொ
றினமுமேநுகர்தலின்றி ‡ தீனர்க்கும் வழங்கலின்றித்
தனமதைக்காத்தனச்சுத்தருவினைக்காத்தல்போலாம். (௮)

வேறு.

மெலியுமேழைக்கிடாமல்விளைபொன்னை
மலியுஞ்செல்வர்க்குவாரிவழங்குதீ
னலியிலார்க்கருணன்மருந்தும்பெகு
கொலிகடற்பெய்யுறையையுமொக்குமே. (௯)

வானவிலங்கும்விண்வாழ் $ பக்கியுந்தந்த
மீனமோடன்றியெடாதிரையேழைகட்

‡ தீனர் - யாசிப்போர். $ பக்கி - பறவை.

கனமிடாதுசம்மாசழதொன்றையே
மனமுவந்துவளர்ப்பர்கயவரே. (௰)

வேறு.

தானற்கனிசிந்தாதுயர்தருவைச்சிலைசழியா
லூனப்படமோதிப்பழமுதிர்ப்பாரெனவுலகிற்
றீனர்க்குவழங்காதுறைதீயன்பசியுளரான்
மானத்தையிழந்தேபொருள்வவ்வப்படுவானே. (௰௧)

சாங்காலையோர்பிசினன்பொருடானஞ்செயவுன்னித்
தேங்கான்மொழிமனைமைந்தரைவிளித்தானவர்தெரிந்தே
யாங்காயவனுரையாவிதமவன்மேல்விழுந்தழுதார்
தாங்காதவனுயிர்தீர்ந்தனன்றனம்போற்பகையுளதோ. (௰௨)

௨௩-ம் அதிகாரம் உலோபம்
முற்றுப்பெற்றது.
ஆக அதிகாரம் ௨௩-க்கு திருவிருத்தம்-௨௪௭.

24-ம், அதிகாரம்.

சோம்பல்.

சிற்றெறும்பாதியாச்சீவகோடிகண்
முற்றமெய்யுழைத்துயிர்முறையிற்காக்குமால்
சற்றுமெய்யசைவிலாச்சுழக்காருயி
ரற்றவோர்சவங்கொன்மற்றசரமேகொலோ. (௧)

விடக்குறுஞ்சடம்பலவேலைசெய்தற்கா
நடக்கவுமோடவுநனிபுறப்புகண்
மடக்கவுநீட்டவும்வாய்ந்ததாற்சும்மா
இடக்குமெய்ச்சோம்புளோர்சேடுளோர்களோ. (௨)

தெளிவுறநூல்பலதினமும்வாசித்து
மிளிருடல்வருந்தியும்வெறுக்கையீட்டிநற்

இளிமொழிமனைவியைக்கிளைஞரைப்பல
வெளியரைத்தாங்குவோர்க்கில்லைமந்தமே. (௩)

வேறு.

மடிசேருமவர்க்கொருநாளு * மறல்
விடியாதவர்நெஞ்சிடைவெந்துயரே
குடியாகுமறந்தொடர்குற்றமெலா
நெடிதாசவளர்ந்திடுநிச்சயமே. (௪)

வேறு.

பாரெல்லாமாள்வேந்தருநூறேர்பண்போருஞ்
சீரெல்லாஞ்சூழ்செல்வருமந்தஞ்சேராரே
னேரில்லாமாபாதகர்தீனர்நெடுஞ்சோர
ரூரெல்லாஞ்செய்துய்ப்பவர்மாசோம்புடையாரால். (௫)

எய்யாவம்பேவல்லிசைமாறியிறுமென்று
மொய்யாவிரதமாழியொடுங்கெட்டொழியுந்தம்
மெய்யானதுவேவியர்வையுறப்பல்வினைகையாற்
செய்யாதவரேநோய்பலவுற்றுத்தேய்வாரே. (௬)

௨௪-ம் அதிகாரம் சோம்பல்
முற்றுப்பெற்றது.

ஆக அதிகாரம் ௨௪-க்குத் திருவிருத்தம்-௨௫௧.

25-ம், அதிகாரம்.

சினம்.

வலியரைச்சினப்போர் வரையினின்மோது மட்கலமெனவுடைந்தழிவார், பொலிவுறத்தமையோப் பவர்களைச்சினப்போர் புலியிரண்டொன்றை யொன்றடித்து, மெலிவொடிரண்டுங் கெடுபோற்கெடுவார் மெலியரை வெகுளுவோர் வேங்கை, யெலியினையெதிர்த்த தன்மைபோலிழிவுற் றெரிநரகியையமிழ்ந்துவரே. (௧)

* மறல் - தரித்திரம்.

வேறு.

எம்மையுந்தெரியாமலிச்சினம்வந்ததென்பீ
ரும்மைநோய்செயும்வலியரைவெகுண்டிடாதொளிப்பி
ரிம்மைவாழ்விலாவெளியர்பாற்றினமுகக்கெய்தும்
வெம்மைநீரறிந்தோவறியாமலோவிளம்பீர். (௨)

கண்சிவந்திடமெய்யெலாநடுங்கிடக்காலான்
மண்சிதைந்திடவுதைத்துநாக்கடித்திதழ்மடக்கி
யெண்சிதைந்திடச்சினங்கொள்வீர்நுய்மெயோடிதயம்
புண்சுமந்தலாற்பிறர்க்கென்குறைபுகல்வீர். (௩)

* கோடவாண்முகஞ்சுழித்திதழ்மடித்தெழில்குலையச்
சேடன்மீதியான்சினமுற்றபொழுதெதிர்நிசழு
மாடிநோக்கயானியான்கொன்மற்றூர்கொலென்றயிர்த்துத்
தேடிநோக்கவோர்குரூபமேகண்டுலந்திகைத்தோன். (௪)

சினமுளோன்மனைமைந்தர்களவன்வெளிச்செல்லுந்
தினமெலாந்திருவிழவுகொண்டாடுவர்செல்லா
தினையன்றங்குநாளிழவுகொண்டாடுவரிறப்பின்
மனையிலோர்பெருமணவிழாவந்தெனமகிழ்வார். (௫)

நாளுநாங்கொளுந்துயர்க்கெலாங்காரணநாடின்
மூளுஞ்சீற்றத்தின்விளைவதாமுனிவகமுடையோர்
தேளும்பாம்பும்வெஞ்சின்விலங்கினங்களுநனிவாழ்ந்
தாளுங்கானில்வாழ்பவரெனத்தினமஞரடைவார். (௬)

தழையுஞ்செல்வத்துட்பிறந்துநல்லோரவைசார்ந்து
பிழையினூலெலாமுணர்ந்துநீவைகலும்பிழைத்தா
யிழையுந்தீனராய்ப்பிறந்துகற்றிடவகையில்லா
வுழையர்செய்பிழைக்காமுனிந்தனையிதென்னுளமே. (௭)

* சோடல் - கோணல்.

வேறு.

† பைதலையெய்தலாதிப்பான்செயலமையப்பைதல்
செய்தவர்தமைச்சினத்தல்சினவாதன்மேற்கல்லைப்
பெய்தவன்றனைவிட்டக்கல்பிளந்திடப்பொறலுங்கையா
லெய்தவன்றனைவிட்டம்பைமுனிதலுமேய்க்குமாலோ. (௮)

௨௫-ம் அதிகாரம் சினம்

முற்றுப்பெற்றது.

ஆக அதிகாரம் ௨௫-க்கு திருவிருத்தம்-௨௬௧.

26-ம், அதிகாரம்.

பொறாமை.

மாங்கனிவாயிற்கவ்விமரத்திடையிருக்குமந்தி
பாங்கர்நீர்நிழலைவேறோர்பழமுணுங்குரங்கென்றெண்ணித்
தாங்கருமவாவிற்றாவிச்சலத்திடையிறந்ததொப்ப
நீங்கரும்பொறாமையுள்ளோர்நிலத்திடைக்கெடுவர்நெஞ்சே.

தாரணியிலெவரேனுந் துயருறிற்றன்றலையின் முடிதரித்தொப்பாஞ், சீரணியுஞ்செல்வமவர் படைக்கிற்றன்றாய்மனைசேய்செத்ததொப்பாங், காரணமேயொன்றுமின்றிச் சுகதுக்கந்தன்வலியாற் கணத்துக்குள்ளே, பூரணமாவாக்கிடுவோன் பொறாமையுளோ னன்றியெவர் புவியின்கண்ணே. (௨)

வவ்விடமேமுதலாய வினையாவொவ்வோர் பயன்கைவந்துகூடு, மவ்வினைகளியற்றவெவ்வே றிடங்கருவிசமையமும்வர்நிமையவேண்டு; மெவ்விடத்து மெப்பொழுது மொழியாமலெரியென்ன விதயந்தன்னைக், கல்வியுண்ணு மவ்வியத்தாற் சடுகளவுபயனுளதோ கருதுங்காலே. (௩)

ஆண்டெலாம்பிறராக்கநோக்கியே
மீண்டுமீண்டுநெட்டுயிர்ப்புவீங்கினுந்

† பைதல்-துன்பம்.

நாண்டியவர்தனந்தாழ்ந்துன்கைமிசை
யீண்டுசேருமோவிதயமேசொலாய். (௪)
மக்கள்பலருளார்மகிவிசாலமாம்
பக்கமவர்தினம்படைப்பரோர்நல
மொக்கவதுபொறாதுள்ளநைந்திடற்
றுக்கமோயுமோசொல்லெனெஞ்சமே. (௫)
நிறையுநீர்க்கலசவில்லைநீணிலத்
தரையுங்கல்வியிலறிவின்மேன்மையிற்
குறையுளார்க்கலாற்கோதின்மாண்பினர்க்
கிறையுமவ்வியமில்லையில்லையே. (௬)
அறமுளார்கள்போலறிஞர்போம்புகழ்
பெறவுறுந்தல்பெருமையாயினும்
புறமுளார்கள்போற்பொருளிலேமன
வுறுமவ்வுற்கணேயுறுகணீயுமே. (௭)

வேறு.

பூட்டுமரிகண்டம்புனைந்தழுங்குவார்போலுஞ்
சோட்டியினைத்தானேசுமந்துசெடுங்கயம்போலும்
வாட்டுந்துயர்கள்பலவையமிசையிருக்கக்
கோட்டமுளோர்வேறுகுலந்தமக்குண்டாக்குவரே. (௮)

௨௬-ம் அதிகாரம் பொறாமை

முற்றுப்பெற்றது.

ஆக அதிகாரம் ௨௬-க்குத் திருவிருத்தம்-௨௬௯.

27-ம், அதிகாரம்.

வித்தியாகர்வம்.

——(*)——

என்னைநீவருந்திக்கவிபாடினுமெடுத்தகற்பனைமுன்னோர்சொன்னதேயலா, நூதனமொன்றிலைத் தொன்மைநூல்பலவாகு, முன்னந்நூலெலாந் தந்தவனியலை முற்றுணர்ந்தனையல்லை, யுன்னின்மிக்கவர் பலருளார் கல்வியாலுள்ளமே செருக்கென்னே. (௧)

வே று.

பருத்திவிதைத்தெடுத்து நூலாக்கியாடைபண்ணி யளித்தாலுடுத்தல் பாரமாமோ, திருத்திமண்ணிற் செந்நெல்வித்தைத்தரிசியாகித் தீஞ்சோறட்டிட்டி லுண்ணச் செய்வாய்நோமோ, வருத்தமொடு பிலக்கணங்க ளிலக்கியங்க ளரியநூல் பலமுன்னோ ரளித்ததாலே, கருத்தேயந் நூல்கள்சில கற்றுணர்ந்து கவிசொல்லல் வியப்பன்று கர்வமென்னே. (௨)

வே று.

இயலொடுதமிழ்மூன்றுமெள்ளளவுந்தோரா
யயர்வறுகலைஞானமறுபதினொடுநான்கும்
பயனொடுதேர்வாரேபலருளரவர்முன்னி
வெயிலின்முன்னிடுதீபமின்மினியானெஞ்சே. (௩)

உஎ-ம் அதிகாரம் வித்தியாகர்வம்

முற்றுப்பெற்றது.

ஆக அதிகாரம் உஎ-க்குத் திருவிருத்தம்-உஎஉ.

28-ம், அதிகாரம்.

அழகாற்செருக்கல்.

——(*)——

எழிலுளேமெனச்செறுக்குறநெஞ்சமேயிழைதகினீத்தங்கந்
சமுவிடாதுறநோக்குதிமுகுந்தனைக் கஞ்சனந்தனினேக்கி
னெழுநிலத்திடையுன்னின்மிக்காருளரெனவறிவாயிமத்
தழியும்வெண்டலையுன்றலைபோலிருந்தவனுற்றதறிவாயே. ()

வே று.

தோற்றூர்போர்வை துறந்திறந்து கிடந்தவழகியைக்காணச் சுடலைசென்றோங், சோற்போன்ற வெள்ளன்பின்குவையொன்றேகண்டனஞ்செங் குமுதவாயு, நூற்போன்ற விடையுமன நடையுமணி தனமுமதி நுதலும் வாய்ந்த, சேற்போன்ற விழியும்பான் மொழியுங்காணுமலுளந் திகைத்தோமன்னோ. (௨)

நோக்கதனிற் பீளையிரு செவிகளிலுங் குறும்பியன நுகர்வாயெச்சின், மூக்கதனிற் சளிதலையிற்பேன்வெயர்வை மலசலங்கண் மூளுநாற்றம், போக்கவொருநாட்சமுவா விடிலழுக்கு மிகத்திரண்டு புழுத்துநாறு, மாக்கமிலாத்தேகமிதை யழகென்னச்செருக்கலறியாமையாமே. (௪)

வே று.

கட்புலன்றனையேகவர்ந்திடுகவினுளேமெனவனுதினம்
பெட்புறப்புவிற்செருக்குதல்பெருமையன்றுளிர்பேருட்
லுட்புறத்தினையேதிருப்பிடிலோங்கலாமலக்காடுசூழ்
மட்புறச்சுவர்தீட்டுசித்திரமானுநம்மெழிலெனஞ்சமே. (௪)

வே று.

மண்ணிற்செய்பாவைமீது வயங்குபொற் பூச்சோதண்பூங்
கண்ணியை * மாற்றிற்சூடுங் காட்சியோ பழம்பாண்டத்திற்
புண்ணியசோலமோநற் பண்பொடுஞானங்கல்வி
புண்ணியமேதுமில்லான் பூண்டபேரெழிலுடம்பே. (௫)

உஅ-ம் அதிகாரம் அழகாற்செருக்கல்

முற்றுப்பெற்றது.

ஆக அதிகாரம் உஅ-க்குத் திருவிருத்தம்-உஎஎ.

29-ம், அதிகாரம்.

செல்வச்செருக்கு.

மணிகள்பல வகைச்செல்லாம் பொன்முதலு லோகமின்னுமண்ணுங்கட்டி, துணிபட்டாடைகள் பருத்திநூல் பூச்சிக்குடர்நாயின் றோலுரோம, மணிபுழுகுகத்தூரிமுதலியபூனையின்மலம்பாலாவிரத்தந், தணிவீறேன் வண்டெச்சி லிவைசெல்வமெனச்செருக்கற்கு மோநெஞ்சே. (௧)

---

* மாறு-துடைப்பம்.

செங்கல்வெண் கல்கருங்கல்லைநவ மணிகளெனச் செல்வர்சேர்ப்பார்யாருஞ், செங்கல்வெண்கல் கருங்கல்லைச் சேர்த்திண்டோ மிருவர்கல்லுஞ் சீர்தூக்குங்கா, ணைங்கல்லே யிடையதிகமெங்கணுமுண் டெதிர்ப்போரை நாசஞ்செய்யும், பங்கமுறச்செல்வாநம்மின் மிக்கோரென் றகங்கரிக்கும் பான்மையென்னே. (௨)

வேறு.

இடையிற்கோவணமுமின்றியிங்குதித்தோமவ்வாறே
கடையினில்வெறுங்கையோடுஞ்சுழிகுவநடுவிற்செரு [க்கும்
முடைமையாற்பெருமை யென்னேவூர்க்கெலாம் பொதிசுமக்
விடைதருக்குற்றதென்னவீண்செருக்குற்றாய்நெஞ்சே. (௩)

சுழல்சடக்கால்போலுந்தோன்றியேயழிமின்போலு
மழன்மனவேசைபோலுமருநிதிமேவிநீங்கும்
பழப்போலதனைநம்பிப்பழியுறச்செருக்கன்மேக
நிழலினைநம்பிக்கைக்கொண்டுங்குடைநீத்தலொப்பே. (௪)

வேறு.

தரித்திரந்தரித்திரமென்னுந்தாரணி
சிரித்திடச்செல்வமேசெல்வமென்னுமிச்
சரித்திரமுணர்ந்துமேதரையிற்பொன்னெமக்
குரித்தெனச்செருக்குதலானன்றுள்ளமே. (௫)

நாசமாங்காலமேநண்ணுமுன்னிற
நீசலுக்கெய்தலுமிரியுமுன்னமே
தேசதுமிகுத்தொளிர்தீபம்போலவு
நீசர்தஞ்செருக்கினானிதியிழப்பரே. (௬)

வேறு.

செழித்திடுநாளினிற்செருக்குற்றாய்
கழித்துணைமாநிதிகைநீங்கிற்

பழித்திடுமுலகின்முன்பரிவின்றி
விழித்திடலெப்படிவினைநெஞ்சே. (௭)

௨௯-ம் அதிகாரம் செல்வச்செருக்கு
முற்றுப்பெற்றது.

ஆக அதிகாரம் ௨௯-க்குத் திருவிருத்தம்-௨௮௪.

30-ம், அதிகாரம்.

தீயரைச்சேராமை.

செழுமலரிடைமதுசிறையளிநுகரு
முழுவிடமதுபெறுமுனிவுடையரவம்
பழுதறுமறநிலைபயிலுவர்சிலரே
வழுவயலவரிடமருவுவர்பலரே. (௧)

வேறு.

மணமனைசேர்மணமாலைமாண்புறும்
பிணவனத்தாரிழிவெய்தும்பெற்றியார்
கணமதிற்சேர்ந்தவர்கணங்கொண்டோங்குவர்
குணமிலாரினமுறல்குறையுண்டாக்குமே. (௨)

மண்ணியல்பாற்குணமாறுந்தண்புனல்
கண்ணியபொருண்மணங்கலந்துவீசுங்காற்
புண்ணியராதலும்புல்லாதலு
நண்ணினத்தியல்பெனநவிலலுண்மையே. (௩)

பாரினிற்பிறந்தபோதெவரும்பண்பினோர்
பூரியரெனப்பெயர்பூண்டதில்லையாற்
சீரியரென்னலுந்தீயரென்னலுஞ்
சேரினத்தியல்பினாற்சேர்ந்தநாமமே. (௪)

கயவரைச்சேர்ந்தவன்கலந்தபோதவர்
செயலினையெண்ணுவன்றினஞ்செலச்செல

மயன்மிதிந்தவர்செயன்மகிழ்ந்தனுட்டிப்ப
* னியவரைச்சேர்தல்போலில்லைத்தீமையே. (௫)

௩௰-ம் அதிகாரம் தீயரைச்சேராமை
முற்றுப்பெற்றது.

ஆக அதிகாரம் ௩௰-க்குத் திருவிருத்தம்-௨௮௯.

31-ம், அதிகாரம்.

பிழைபொறுத்தல்.

எப்பிழையா னீபிறரைச் சினந்தவர்க்கின்னாச்செய்யவெ ண்ணினையோ, வப்பிழைநீ செய்திலையோ வுன்னைப்போ லவர்பிழைக்க லாகாதோமா, வெப்பமுற நானிலையோ நீயொருவன்பிழைசெய்ய விண்வேந்தன்பை, யொய்பமுட னதிகாரம் பெற்றனையோ மனமேநீ யுரைசெய்வாயே. (௧)

பிழையிலான் கடவுளன்றி மக்களிற்றப்பில்லாதார் பிறருமுண்டோ, மழையினுமே யசனியுண்டு மதிக்குமோர் மறுவுண்டுமலர்க்குமுள்ளாங், கழையினுமே சக்கையுண்டு கனியினுந்தோல்கொட்டையுண்டு கதிர்க்குங்காம, விழைவினன் மறம்புரிதுனரர்க்கியல்பாதலினவரை வெறுக்கொணாதே. (௨)

நாவையே கடித்ததெனப் பற்றகர்க்கும்பேருளரோ நடக்கும்வேளை, பூவையே பொருவுகழல் சருக்கியசென் றதைக்களைவோர் புவியிலுண்டோ, காவையாருலகமெனும் பேருடலினவயவம்போற் கலந்தசீவர், தாவையேசெய்யினு மிக்கறிவுடையோர்தமை செய்த றகுதியாமால். (௩)

உனையொருவ ரிழந்தனரே லேதுக்கா விசழ்ந்தனவென் றுன்னியுன்பாற், றினையளவு தப்புளதே லதைநீக்காய் தப்பின்றேற்சினமுறாதே, கனைகழையை வெம்பென்னிற் கழைக்குமோர்குறையுண்டோ கல்லின்மோதித், தனையுடைப்போர்க் குணவுதருந் தேங்காய்போலவர்க்குநன்மை தனைச்செய் நெஞ்சே. (௪)

---

* இயவர்-கீழ்மக்கள்.

தீதொருவர்செய்தனரென் றதற்கெதிராய்நீயவர்க்கோர் தீங்குசெய்யிற், சாதுநீயவர்தீய ரென்பதற்குக்கரியென்ன சக்கிலாதா, ரோதவிடமுண்ணின்விழி யுடையாருமுண்ணுவரே வுலப்பில்செந்நெல், சேதமுறவைத்திடுவோர்க் குணவாதல் போனலமேசெய்வாய்நெஞ்சே. (௫)

நல்லவர்தீயவரென்னா தெவரையுமேபுவிதாங்கு நனிநீர் நல்குஞ், செல்லருணனொளிபறப்புங் கால்வீசுமந்தாமுஞ் சேருமொப்பொன், றில்லாதான்றீயவர்க்கா விரங்கிமனுவேடமுற்றானெனினன்னார்பாற், செல்லாதுன்சினமனமே பொறுமையேபெருமையன்றோ செப்புங்காலே. (௬)

இன்னலெமக்கிழைத்தசனல் வீடிழந்துநாகாள்வாரெனநினைந்து, பன்னரியபெரியர்பிழை பொருப்பர்பொறார்தம்பிழையைப்பாமனற்றான், முன்னொருவன்செய்தனனென் றவனுக்குச்செயுமிடாம் முறையிலான்சேய், பன்னிதமரையுஞ் சேருமவர்நமக்கெப்பிழைசெய்தார் பகராய்நெஞ்சே. (௭)

௩௧-ம் அதிகாரம் பிழைபொறுத்தல்
முற்றுப்பெற்றது.

ஆக அதிகாரம் ௩௧-க்கு திருவிருத்தம்-௨௯௬.

32-ம், அதிகாரம்.

இனியசொற்கூறல்.

வட்டவுலகெட்டுதிசைமட்டறநிரப்பும்
வெட்டவருதுட்டரைவிலக்கிவசமாக்கு
நட்டமிலையெட்டலையுநட்டுநரரெல்லா
மிட்டமுறகட்டுதவுமின்மொழியதன்றோ. (௧)

இக்குவலயக்கணிழிவுக்கிடமதாகும்
பக்கமொடுமக்கள்பகைபுக்கவழிபண்ணுந்
துக்கமும்விளைக்குமொருதுக்கமும்விளைக்குந்
குக்கனைநிகர்க்குமவர்கக்குமிழிகூற்றே. (௨)

சந்தநிறைசெப்பிறைவைசாணமுளதென்னக்
கந்தமதெவர்க்குநனிகாட்டிவிடல்போலு
நிந்தனையுளாரினிய நீர்மையினரென்ன
முந்தவவர்வாய்மொழிமொழிந்துவிடுமன்றோ. (௩)

நன்மைபுரியார்களுநயந்தவிர்கொடுஞ்சொல்
லின்மையெனினல்லவரெனப்புகழ்படைப்பார்
தின்மைபுரியார்களும்வழங்குமுறைதீதேற்
புன்மையுறுதீயரெனவெள்ளுமுயர்பூவே. (௪)

வன்மொழியுரைக்கினெதிர்வன்மொழிகிடைக்கு
மின்மொழியுரைக்கின்வருமின்மொழியெமக்கு
நன்மொழிகளேடலவிருக்கநவிலாமற்
புன்மொழியுரைப்பவர்கள்பூரியர்களன்றோ. (௫)

௩௨-ம் அதிகாரம் இனியசொற்கூறல்
முற்றுப்பெற்றது.

ஆக அதிகாரம் ௩௨-க்குத் திருவிருத்தம்-௩௱௧.

33-ம், அதிகாரம்.

பிறர்க்குத்தீங்குசெய்யாமை.

விடதரம்பற்றிவேறொருவன்மேலிடு
மடலுளோன்றன்னைமுன்னதுகடித்தல்போ
லிடர்பிறர்க்கிழைத்திடுமியவன்றன்னைமுன்
மிடலொடுமவ்விடர்மேவிச்சாடுமே. (௧)

படியின்மானிடர்மிகுபண்புளோரலாற்
கொடியரைநரரெனக்கூறல்பாரெலா

மிடியெனக்கொலைத்தொழிலியற்றுந்தீவெடிற்
பொடியினை மருந்தெனப்புகலலொக்குமே. (௨)

உரவுநீர்க்கருங்கடலுடுத்தபார்மிசைப்
பார்வருந்திடவிடர்பண்ணுவோன்றனை
நரரெலாம்பகைசெய்வர்நண்ணுமாயிர
மரவுசூழ்கின்றவோர்தேரையாவனே. (௩)

வேறு.

சயலிற்பாய்சிரல்கால்சிக்கிக்கொண்டெழ
வயமிலாதுயிர்மாய்கின்றதன்மையோ
லயலவர்க்கழிவாக்குவோரந்தாஞ்
செயலினைத்தவர்க்கேவந்துசேருமே. (௪)

வேறு.

* புயகமந்தைத்தேள்புலியைப்பொல்லாதவிலங்கையெலா
மயர்வாகவடித்தோட்டலவைகள்குணத்தாலன்றோ
வியல்பின்றியெந்நாளுமேதிலார்க்கிடரிழைக்குங்
கயவனையேவைதடித்துக்காணேட்டனன்றுமே. (௫)

௩௩-ம் அதிகாரம் பிறர்க்குத்தீங்குசெய்யாமை
முற்றுப்பெற்றது.

ஆக அதிகாரம் ௩௩-க்குத் திருவிருத்தம்-௩௱௬.

34-ம், அதிகாரம்.

நெடுந்துயில்.

விடியலிற்பறவை மிருகம்யாவுமுன் விரைந்தெழுந்து பலவினைசெயுங், கடிமலர்ப்பொழில்கண் மலருமார்வமொடு கடலெழுந்துகரைதாவிடும், படியின்மன்னுயி ரெலாமெழுந்து தொழில் பலவியற்றிடவெழாமலே, தடியெனத்துயிலுவோ னரன்சொலொரு தாவரஞ்சொலறியோமரோ. (௧)

---

* புயகம் - பாம்பு.

வேறு.

தங்கருமங்கள்செய்யத்தனிப்பகல்போததென்ன
விங்கறிவுடையோர்தூங்காரிரவினுமூடர்துஞ்சக்
கங்குலும்போதாதென்னப்பகலுங்கண்படுவர்யாவும்
புங்கமாத்தேர்ந்துவேறோர்புரையிலார்போலுமாதோ. (௩)

வானுலாமருணனென்னுமக்கவாயுளின்கணக்கன்
றனெழுமுன்னெழாரைச்சகத்திரக்காத்தாற்றட்டு [வா
மேனென வெழார்வாழ்நாளை யெண்குறைத் தெழுதிக்கொள்
ளுனதுகண்டுகாலனவரிடமணுகுவானே. (௩)

௩௪-ம் அதிகாரம் நெடுந்துயில்

முற்றுப்பெறறது.

ஆக அதிகாரம் ௩௪-க்குத் திருவிருத்தம்-௱௩௬.

35-ம், அதிகாரம்.

பெருண்டி.

நனிகிழல்புனல்கொள்பைங்கூழ்நாசமாமிகவேயுண்ணு
மினியமாமருந்துநஞ்சாமின்பமுமிகிற்றுன்பாகும்
பணிபிணிமடமைமந்தம்பழியெலாம்வம்மினென்னக்
கனிவொடுமழைக்குந்தூதாங்கழியபேருண்டிமாதோ. (௪)

௩௫-ம் அதிகாரம் பேருண்டி

முற்றுப்பெற்றது.

ஆக அதிகாரம் ௩௫-க்குத் திருவிருத்தம்-௱௩௭.

36-ம், அதிகாரம்.

தற்புகழ்.

சடமதைத்தழுவவுன்னிச்சகதியிற்றோய்தல்போலுஞ்
சுடரினைத்தூண்டவேண்டியூதியேதொலைத்தல்போலு
மடமையாற்றன்னைத்தானேபுகழுவோன்வசைகளெல்லாம்
புடவியேயெடுத்துரைக்கப்புணுவனிங்கையம்மா. (௧)

வேறு.

தற்புகழ்வோன்றனைப்பழிக்குந்தாரணி
சொற்புகழ்விரும்பிடான்றனைத்துதித்திடு
நற்புகழ்பெறுவழிநன்னடக்கையோ
டற்பமுந்தற்புகழாமையாகுமே.

௩௬-ம் அதிகாரம் தற்புகழ்

முற்றுப்பெற்றது.

ஆக அதிகாரம் ௩௬-க்குத் திருவிருத்தம்-௱௩௮.

---

37 ம், அதிகாரம்.

புகழுமிகழுமதியாமை.

தன்றனையிலானேயுள்ளத்தன்மையையறிவான்பூமி
யின்றொருவனைத்துதிக்குமேசிடுமவனைப்பின்னு
நன்றினைத்தீதென்றுன்னுந்தீதைநன்றென்னவுன்னும்
பொன்றுமானிடர்புகழ்ச்சிபுனலின்மேலெழுத்துச்சொப்பே.
வசையுமீக்கூற்றுமற்றோர்வாய்வருவாயுவல்லாற்
பசையுளதோவக்காற்றைப்பாரிலோர்பாரென்றெண்ணி
யிசையினன்மகிழ்வும்பேசுமிகழ்வினாற்றுயருமுற்று
நசையினாற்கொல்லுசெஞ்சநஞ்சமேயொக்குமாதோ. (௨)

சுணங்கனோர்பாற்குரைக்குஞ்சூழ்காங்கத்துமோர்பாற்
பிணங்கியேபுள்ளொலிக்கும்பெரும்பறையோர்பாலார்க்கு
மிணங்கியிவ்வொலிகளெல்லாமேற்கின்றசெவியோர்தீயன்
குணங்கெடக்கூறும்வன்சொற்கொண்டிடிற்குறையென்னெ
ஞ்சே. (௩)

௩௭-ம் அதிகாரம் புகழுமிகழுமதியாமை

முற்றுப்பெற்றது.

ஆக அதிகாரம் ௩௭-க்குத் திருவிருத்தம்-௱௪௰.

38-ம், அதிகாரம்.

பரோபகாரம்.

அனமிலார்க்கனமாய்வாழவகமிலார்க்ககமாய்த்துன்ப
மனமுளார்க்குவப்பாய்நோயின்வருந்துவோர்க்கருமருந்தாய்
தனமிலார்க்கரும்பொன்னாய்நற்றாய்தந்தையிலார்க்கன்னா
யினமிலார்க்கினமாயார்க்கும்யாவுமாயிசைதலன்பே. (௧)

அருந்தவேகூழும்பூணவாடையும்வீடுமின்றி
வருந்துவோரெண்ணிலார்நம்மருங்குளாரெனவறிந்தும்
விருந்திடாய்மணிமாடத்துமேவிநீயொருவன்வாழப்
பொருந்தினாய்மனமேமக்கட்போலிநீவிலங்கானாயே. (௨)

ஏவல்செய்வோர்க்குக்கூலியிடைத்துகிலுணவாம்யாமோர்
காவலனெனினுஞ்சோறுகலையன்றியொன்றுங்காணோ
மாவலாய்ப்பொருளையீட்டியயலவர்க்காச்சுமந்தோ
மீவதைமேற்கொண்டேமேலிணையில்வீடடைவோநெஞ்சே.

சாந்தமார்வறியர்போலத்தற்பரன்வருவான்றுவென்
றேந்துசைவீடுகொள்ளென்றேந்துகையாமக்கையி
னீந்தபொன்விலைபோல்வீட்டுக்கிட்டபொன்னுமன்னைக்
காய்ந்திலையென்போர்வேண்டோங்கதியென்பார்போலுமா
தோ. (௪)

இரவலர்தம்மையென்னுமேழைகாளியம்பக்கேளீர்
நரகைமோக்கத்தைவிற்கநண்ணியவணிகரன்னார்
பரகதியவரைத்தாங்கும்பண்பினர்க்கீவ *ரள்ளல்
கரவுளார்க்கீவரென்னினவர்கதைசழறலென்னே. (௫)

பிறர்புகழினைக்கைம்மாற்றைப்பேணியேயுதவிசெய்வோ
ரறமுளாரல்லர்சித்தனருட்குமேயருகரல்லர்

* அள்ளல்-நரகம்.

இரவலர்க்காஞ்செய்நன்மைத்திகழிடக்கரங்காணாமல்
வறியர்பாத்திரமறிந்துவழங்குவோர்மாட்சியோரே. (௬)

மக்கடம்பொறையைத்தாங்குமகிக்குமன்னரைக்காக்க
மிக்கநீர்பொழியாநின்றவிண்முகிலினுக்குஞ்செய்யத்
தக்கவோரெதிர்நன்றுண்டோசமயத்தோர்பயனும்வேண்டா
தொக்கவேசெய்நன்றியுலகினும்பெரிதாமாதோ. (௭)

மன்னியகனிகாய்நீழன்மற்றெலாமுதவிப்பின்னுந்
தன்னையுமுதவாநின்றதருவெனத்தங்கையார்ந்த
பொன்னெலாமுதவிப்பின்னும்பூட்சியாலுழைத்திட்டேனு
மின்னுயிருதவியேனுமிடுக்கண்டீர்ப்பார்நல்லோரே. (௮)

வேறு.

நூனுழைந்தநுவலருஞ்சீலர்தம்
பானுழைந்தபடர்மதியார்பிறர்
கானுழைந்தகடுவுந்தங்கண்ணின்வை
வேனுழைந்தெனமுன்னிமிறைப்பரே. (௯)

புறம்வருந்திடப்பூதவுடம்பினை
மறவுடம்பைவளர்ப்பரறிவிலா
ருறவிநிம்பையுருவண்ணமீந்துநல்
லறவுடம்பைவளர்ப்பரறிஞரே. (௰)

ஓடியெங்குமுலரும்பைங்கூழ்களை
நாடிமைமுகினன்மழைபெய்தல்போல்
வாடிநையும்வறிஞரிருக்கையைத்
தேடிமேலவர்செய்வருதவியே. (௰௧)

காரிடத்திரந்தேனுங்கயநதி
நீரிணைப்பணையெங்குநிறைத்தல்போ
லாரிடத்திரந்தேனுமறமுளார்
பாரிடத்துப்பகுப்பர்வறிஞர்க்கே. (௰௨)

வேறு.

சாடுவெங்சோடையைத்தலையிற்றூங்கியு
மாடுளோர்க்கருநிழல்வழங்குமாலெனத்
தேடுதம்பான்மிகக்கிளைக்கினுங்குணப்
பீடுளோர்நன்மையேபிறர்க்குச்செய்வரால். (௧௩)

இதமிலாவுலோபாதம்பொருளையெண்ணியே
மதமொடுநாடொறுமகிழ்வர்மேலவர்
பதவிதீர்மிடியர்க்குப்பரிவிற்றுஞ்செயு
முதவியையுனுந்தொறுமுளங்களிப்பரே. (௧௪)

காமமேவின்பங்கள்கணத்தினீங்கிப்பின்
றீமையேவிளைத்திடும்பிறர்க்குச்செய்கின்ற
சேமநல்லுதவியாற்சேருமின்பர்தா
னீமவீட்டின்பெனநிசருமற்றதே. (௧௫)

௩௮-ம் அதிகாரம் பரோபகாரம்
முற்றுப்பெற்றது.

ஆக அதிகாரம் ௩௮-க்குத் திருவிருத்தம்-௩௩௰.

39-ம், அதிகாரம்.

பொருளாசை யொழித்தல்.

என்பொருளென்பொருளென்றுசீவன்விடுமனமேயொ
ன்றியம்பக்கேளா, யுன்பொருளானு லதன்மே லுன்னுமம் வ
ன்றியம்பக்கேளா, யுன்பொருளானு லதன்மே லுன்னுமம் வ
ளாந்துளதோ வுன்றனோடு, முன்பிறந்து வளர்ந்ததோ வினி
யுனைவிட் டகலாதோ முதிர்ந்துநீதான், பின்பிறக்கும்போத
துவுங் கூடவிறந்திடுங்கொல்லோ பேசுவாயே. (௧)

ஒப்பருநற் குணத்தவர்க்குங் கொலைசாமங்கட்களவையு
பதேசிக்கு, மப்பனுய்நேயர்க்குட் பகைவிளைச்குஞ் சத்துருவா
யகிலத்திற்ற, செப்பரிய துயர்க்கெல்லா மாதாவாய்த்தீவினை
க்கோர்செவிலிபாய, விப்பொருளை நற்பொருளென் றெப்ப
டிநீ யொப்புகின்றா யேழைநெஞ்சே. (௨)

நோக்கிருந்து மந்தகராக் காதிருந்துஞ்செவிடரா நோயி
ல்லாத, வாக்கிருந்து மூகையரா மதியிருந்துமில்லாரா வளரு
ங்கைகாற், போக்கிருந்துமுடவரா வுயிரிருந்துமில்லாதபூட்சி
யரா, வாக்குமிந்தத் தனமதனை யார்க்கமென நினைத்தனை நீ
யகக்குரங்கே. (௩)

நிறைசெல்வ முடையாரை நோய்துன்ப மணுகாதோ நி
னைத்ததெல்லாங், குறையின்றிப் பெறுவரோ புவிக்கரசு செ
லுத்துவரோ குறித்தவாயுள், பிறையென்ன வளருமோ விய
மன்வர வஞ்சுவனோ பேரின்பத்துக், குறையுளோ வவர்க்கிா
க மீதெலாமனமேநீ யுன்னுவாயே. (௪)

கனவதனிற் கண்டபொருள் செலவுக்காமோ குனிக்கு
ங் கங்குற்கூத்தி, லினரமைச்ச ரெனவேடம் புனைந்தவர்தம்
மாணையெங்குமேகுமோவிண், கனமின்போ லொழியுமந்தப்
புவிவாழ்வு நிலையென்னக் கருதிக்கோடி, நினைவுற்று யுடல்வீ
ழின்னென்செய்வா யறிவில்லா நெஞ்சக்கல்லே. (௫)

பஞ்சபூதங்களை விண்டாரகையைத் தண்மதியைப் பா
னுதன்னைக், கொஞ்சமும்நம் பொருளெனவுன் னுமல்வெள்
ளி பொன்னுமட் குப்பைதன்னைத், தஞ்சமாம் பொருளென்
ன நினைத்ததன்மேலாசையுற்றுத்தயங்குகின்றாய், நெஞ்சமே
யுனைப்போலு மறிவீனர்தேடினுமிந் நிலத்திலுண்டோ. (௬)

பூதலகம் மில்லம்வான் மேற்பந்தா சசிகதிர்மீன்பொற்றீ
பங்கள், சீதநீர்க்கடம் விருட்சாதிகணம் பூம்பொழிலுலகின்
செல்வமெல்லாம், வீதமா நமதுமக்கள் யாவருநஞ்சுற்றமென
வியந்துன்னுமற், பேதஞ்செய் துழல்கின்றாய் நெஞ்சமே யு
னைப்போலும்பித்தருண்டோ. (௭)

பூதமதி னென்னுநமைத் தாங்குந்தா யொன்றுநாம் புசி
க்குமுண்டி, மாதனையி லொன்றுநஞ்சமையலாளொன்றெமக்
கு வளர்ச்சாந்தாற்றி, பேதமின்றி மற்றொன்று நாமூரும் வா
கனமாம் பின்னுமாதி, நாதனே தந்தையெனிற் செல்வமிது
போலுமுண்டோ நவிலாய்நெஞ்சே. (௮)

மண்டுபெருந் தனமிருந்துங் கண்டுமகிழுவதல்லான் மயல்
போன்முற்று, முண்டுவிடவொண் ணுமோநினைவிற்கும்பஞ்ச
மோவுலகந்தன்னிற், கண்டபொரு ளத்தனையு நமதுசெல்வ
ப்பொருளைக் காத்தெமக்குத், தொண்டுசெய்வோ ரெனவுன்
னி மகிழ்வுற்றாற் றலைப்போமோ சொல்லாய்நெஞ்சே. (௯)

எத்தனைபேர் கையின்முன மிப்பொருடா னிருந்ததவ
ரெல்லாந்தத்த, மத்தமெனநம்பினு ரவர்களைவிட் டகன்றுன்
கை யமர்ந்ததின்னுஞ், சத்தமின்றி யினைமோசஞ் செய்தனந்
தம் போகாத்திற் சாருஞ்சொன்னேன், சிந்தமேயதுசெல்லு
முன்னீசற்பாத்திரத்திற் செலவிடாயே. (௰)

கதிரவனு லொளிரும் பல்வகைக்கல்லை மணியென்றுங்
காமர்மண்ணை, நிதிவெள்ளி யுலோகமென்றும் பெயரிட்டும்வி
லையிட்டும் நிகழம் மண்ணுர், சதியான காசுபணமெனச்செய்
துந் தரையின்மிடி தனையமைத்தோர், மதியிலா நாரன்றிக் க
டவுளோசொல்லுவாய் மருள்சேர் நெஞ்சே. (௧௧)

தரையெலா மெமதெனினு மிருப்பிடமோர்முழமோ ந
ற்றுணியங்கள், வரையெனக் குவிந்துகிடந்தாலுமுண்ப த
ரைநாழிவளரவாவாற், றிரைகட லெலாம்பருக வுன்னுநா யெ
னவெமக்குத்தேவையில்லாக், கரையினிதி காணிதாணியங்க
ணீவேட்டதென்னகருத்தே சொல்லாய். (௧௨)

பொலமிகவுள் ளார்க்குணவின் சுவையின்று பசியின்று
புசிக்குமன்னம், அலமாயுருதோயாக் கவலைபிணி * பிடகர்க

* பிடகர்-வைத்தியர்.

வாருகில்வேண்டும், பலருடலைத் தாங்கினுமோசுமக்சரிதார்ப்
பகைபயமிப்பையுளெல்லா, மிலருறுகணுளரெனிற்செல்வரெ
வர் மிடியரெவ ரியம்பாய் நெஞ்சே. (௧௫)

௩௯-ம் அதிகாரம்பொருளாசையொழித்தல்
முற்றுப்பெற்றது.
ஆக அதிகாரம் ௩௯-க்குத் திருவிருத்தம்-௩௪௫.

40-ம், அதிகாரம்.

சரீரநிலையாமை.

நெருநலோ வகன்றதின்று விடிந்துபசலாயிற்று நிமிட
ந்தன்னி, லருணனே யத்தமிப்ப னிசிவரும்பின் போமறுநா
ளாமிவ்வண்ண, வொருநாளாப் பலநாளாத்திங்களாவாண்ட
துவா வுருவுகொண்டிங், கருநாளாமாயுளுள் சழிவதனையுண
ராயோ வவலநெஞ்சே. (௧)

வையாற்செப்புனைநம்பி யனலாழி கடக்கவுன்னு மதியி
லார்போற், பொய்யாற்செய் மெய்நம்பியேதேதோ நினைவுற்
றுய்புரைசேர்நெஞ்சே, பையவோர் புட்பிடிக்கக் ககனமிசை
வட்டமிடும்பருந்துபோல, வையோகூற் றுனைப்பிடிக்க வற்ற
ம்பார்த் தொளித்துநின்ற தறிகிலேயோ. (௨)

தினமும் * விரேசனங்கொளினு மோயாமன் மலமாரி
திரளாப்பெய்யுங், கனம்போலுந் தேகமிதைப் பிரித்து நோக்
கிடின்மலநீர் கசியுஞ்செந்நீ, ரினமானபுதாலென்பு தசைநரம்
பு குடரன்றியினிவேறுண்டோ, மனமேநீயிதையுமொருபொ
ருளென்னவுன்னவென்ன மருளுற்றாயே. (௩)

மாடாடு விலங்கிறப்பிற் றசைமயிர்தோல் கொம்புதவும
ட்கலந்தா, ளேடாக வுடையினென்றுக் குதவும்வீழ் மாங்கல்
லு முபயோகந்தான், வீடானதிடியின்மேற் பொருளுதவுங்

* விரேசனம்-பேதி.

காடழியின் விறகாமாயக், கூடாகுந்தேகமிது வீழ்ந்தெனதற் கு
தவு நீ கூறாய்நெஞ்சே. (ச)

காடுசேர் மரஞ்செடிபார்த் தித்தனைநா ணிக்குமெனக்க
ணிக்கலாஞ்சீர், நாடுதீர்த் தடநோக்கி யித்தனைநாட் புனலெ
ன்ன நவிலலாமோர், யீடுதானித்தனைநா ணிற்குமென விளம்
பலாமெய்யென்னும்பொய்க் கூடுதானித்தனைநாணிற்குமென்
னப் புவியிலெவர்கூறற்பாலார். (ரு)

நெல்லறுக்க வோர்கால மலர்கொய்ய வோர்கால நெடிய
பாரக், கல்லறுக்க வோர்கால மரமறுக்க வோர்காலங் கணித
முண்டு, வல்லரக்க னனையநம னினைத்தபோ தெல்லாநம் வா
ழ்நாளென்னும், புல்லறுக்க வருவனெனி னெஞ்சமே மற்றி
னியாம் புகல்வதென்னே. (சு)

முற்றியபின் கனியுதிரும் பழுப்புற்றுத் தழையுதிருமு
ழுதுமேநெய், வற்றியபின் விளக்கவியு மென்னவோர் திட
முண்டு மக்கள்காயம், பற்றியவக் கருப்பத்தோ பிறக்கும்போ
தோபாலப் பருவத்தோமூப், புற்றபின்போவீழ்வதென நிலை
யின்றேலிதன்பெருமை யுறைப்பதென்னே. (எ)

புகைவண்டி யூர்ந்துலகை நொடிக்குள்ளே சுற்றுவோம்
புகைக்கூண்டேறிக், கானமிசைப் பறவையெனப் பறப்போ
மோர்புகைக்கலத்தாற் கடல்கடப்போம், வகையாய்மின்னஞ்
சலினு லெத்திசையுள்ளோரோடும் வார்த்தைசொல்வோ, மி
கையானது புதுமைசெய்வோ மாணமதை விலக்கறியோம்வி
யப்பீதன்றே. (அ)

அண்டாண்டங் களின்றூர நிலையளவுகூறுவோ மருக்க
ன்றிங்கட், குண்டாகுங்கிராணமதை முன்சொலுவோங் கடி
யாரத்துதவிகொண்டு, தண்டாதகாலத்தை யளவிடுவோமின்
னும் வெகுசமர்த்துஞ் செய்வோங், கொண்டாடுந் தேகமிது
வீழ்காலமறிவதற்கோர் குறிப்பின்றம்மா. (கூ)

மண்டலத்தா ருயிர்வாங்கா மன்கொண்ட வாயுதத்தின்
வருப்பைநோக்கிற், கொண்டலிடி மின்னீர்கா லனன்மரங்க
ன் மண்ணேய்மீன் கொடியபுட்ச, ஞண்டிவிலங் கின்பதுன்
பம் பகையச்சமூர்வனபே யுலகிலின்னுங், கண்டதெல்லா ம
வன்கையா யுதமென்னிற் றப்பும்வகை காணேனெஞ்சே. (ய)

விழியாழி நுண்மணலைத் தாரகையை யெண்ணிடினும்
வீந்தோர்தம்மைச், சரியாவெண் ணிடத்தகுமோ வின்னமுந
ங் கண்முன்னஞ் சாவோர்தம்மைத், தெரியாது போற்றின
மும் வீண்காலங் கழிக்கின்றாய் திடமாயென்று, மரியாமை
யுற்றனையோ வறியாமை பெற்றனையோ வழுத்தாய்நெஞ்சே.

அனமிகிலோ வாயுகுறை யிற்சூடுண் ணவிடிலின் னவி
நீங்குங், கனமான வெய்யின்மழை பனியுதவா தவையின்றே
ற் கணமில்லாது, தினமுமா யிரங்கண்ட மிமைப்போதா கிலு
மதன்மேற் சிந்தையின்றேற், புனன்மொக்கு ளனவழியு
நெஞ்சமே நாஞ்சுமக்கும் பூட்சிதானே. (கஉ)

பொன்றுநா ளின்னதென நிலையுண்டே லாழிசூழ் புவி
யோராயு, ளொன்றிரண்டு நாளெனினும் போதுநா ளுண்
டென்றோ ருரையுண்டே னு, மின்றோவிக் கணமோபின் னு
றுங்கணமோ மாலையோ விரவோசாவ, தென்றோவென் றோ
ருறுதி யில்லாதவாயுளிதற் கென்செய்வோமே. (கங)

தொல்லுலகிற் புல்லிலையுண் ணாடுமுத லுயிர்களைநற் சுர
ப்பிப்பாலை, நெல்லுடன்பஃறானியத்தைக் காய்கனியைக் கி
ழங்கிலையை நிதமுமுண்டு, மல்லுறவே வளருமிந்தக் காயத்
தை மாமென்று மாடாடென்றும், புல்லென்று நெல்லென்
றுஞ் செடியென்றுங் கொடியென்றும் புகலலாமே. (கச)

ஆதியிற்புல் லிலைகனிகாய்த் தானியமாய் மீன்பறவை
யாடுமாடாய், மேதினியி லிருந்துதாய் தந்தையுடற் சேர்ந்
தொருநாள் வெளியேவந்தங், கோதியபண் டந்தின்று பெரு

த்திறந்துபலசெந்துக்குணவாய்ப் * பஞ்ச,பூதியமாய்நாசமாய்
ப் போநெஞ்சே நாஞ்சுமக்கும் பூட்சிதானே. (சரு)

எமதெனுமெய் பிறக்குமுன்னெங் கிருந்ததின்னஞ் சில காலத் தெங்கேசெல்லு, மமருயிர்நீங் கியபின்னோர் கணமும ணேசெயரித னருகேநில்லார், தமர்சவமென் றெடுத்தெறிவார் பறவைவிலங் கினங்கூடித் தத்திக்கொத்தி, யமர்செய்து புசிக்குமப்போ தென்னென்று கேட்பவா ரறிவினெஞ்சே. ()

சய-ம் அதிகாரம் சரீரம் நிலையாமை

முற்றுப்பெற்றது.

ஆக அதிகாரம் சய-க்குத் திருவிருத்தம்-நருசு.

41-ம், அதிகாரம்.

துன்பம்.

பாரில்யார்க்கும்பழங்கண்சகசமாம்
வீரியங்கெடவெந்துயர்க்கஞ்சுதல்
போரினேர்ந்தவன்போன்றலுக்கஞ்சலு
நீரின்மீன்குளிர்க்கஞ்சலுநேருமே. (க)

பிறந்தசேயுடனேயமும்பீலைதான்
சிறந்தமாநிலஞ்சேர்ந்துபின்னுருயி
ரிறந்துபோமளவுந்துயரென்பதை
யறிந்துநீர்விட்டனுங்கலையொக்குமே. (உ)

வேறு.

கோடிபொன்னுடையவரெனினுங்கோமுடி
சூடியவேந்தரேயெனினுந்துன்பொடுங்
கூடியவாழ்க்கையரன்றிக்கூறுங்கா
னீடியசுகமுளோர்நிலத்தினில்லையே. (ங)

பாக்கியநிலையெனும்பாதகரோர்துயர்
தாக்கிடிற்பொருதுயிர்தன்னைப்போக்குவ

* பஞ்சபூதியம் - பிருதிவிமுதலியவைகள் பூதங்கள்.

ராச்கியவாக்சமுமனுருமொன்றென
நோக்கியசீலரைநோயென்செய்யுமே. (ச)

வேறு

ஒளியினோடிருணிழலொடுவெயில்பொழியுதகத்
துளியினோடுமின்னசனிமாமலையையுஞ்சுழற்றும்
வளியினோளிளந்தென்றலும்வருதல்போன்மாக்கள்
களியினோடருந்துயரமுங்கொள்ளுவர்கலந்தே. (ரு)

ஃழுதுபுண்செயப்புன்செயுநன்செயாமுயர்பொன்
முழுதுந்தீயினிற்சுடசசுடவொளிருமான்மொழியும்
பழுதின்மாமணிதேய்படவொளிமிகும்படர்கொண்
டழுதுகொந்தவர்க்கன்றிமற்றவர்க்கறமரிதே. (சா)

சக-ம் அதிகாரம் துன்பம்

முற்றுப்பெற்றது.

ஆக அதிகாரம் சக-க்குத் திருவிருத்தம்-நசுரு.

42-ம், அதிகாரம்.

அறஞ்செயல்.

பசிவந்த பின்னெல்லை விதைப்பதுபோல் வீட்டிற்றீ பற்றிக்கொண்டு, ஏயும்போ தகையவிக்க வாறுவெட்டல்போலும்போர் நடக்குங்காலை, விசிசநூல் சற்கமுயல் வதுபோலுங்சபமிஞ்சி விக்கிசசிக்கி, யிசிவுகொண்டு சாங்காலத் தெப்படிநீ யறம்புரிவா யிதயப்பேயே. (க)

எத்தொழிலு முற்பழக்க மின்றியெய்தா தரமென்னு மிணையொன்றில்லா, வத்தொழின்முற் பழக்கமின்றிச் சாங்காலத் தலையுமோ வருமன்றற்கு, வத்திரம்வேண் டிற்பருத்தி விதைத்துமுன்ன நெய்யாமன் மணஞ்செய்காலத், தொத்ததுகில் வேண்டுமென வெத்தனைபோர் முயன்றுலு முறுமோ நெஞ்சே. (உ)

சிற்பநூ லிலக்கணனூல் வயித்தியனூன் மாக்சலநூல் செருநூலின்னம், பற்பலநூ லுணர்வதினும் புண்ணியநூல

ரிதாமோ பசாந்நூல்கள், கற்பதன்முன் னரிதெனினும் பின்
னெளிதா மதுபோன்ற சருமமென்னு, மற்புதநூன் முயலு
வோர்க் கெளிதாகு மதையடைவா யறிவினெஞ்சே. (௩)

தினங்கள்செலச் செலவேதோ பெற்றதுபோன் மகிழு
நெஞ்சே தினங்களோடுங், கனங்கொளுமுன் னயுளுஞ்
கழிவதுண ராயுயிர்தீர் காயஞ்சேரும், வனங்கடுகி வாவென்
ன விளித்துன்பாற் றினநருங்கும் வண்மையுன்னி, முனங்
கொளறி யாமையைநீ யினங்கொள்ளா தறஞ்செய்ய முயலு
வாயே. (௪)

இன்றருணே யேங்கண்டோ முயர்ககன முகட்டின்மி
சை யிந்தப்பானு, சென்றடைய நாங்காண்ப தையமதைக் கா
ண்கினுமேற் றிசையிருக்குங், குன்றடையு மளவுநா முயிர்வா
ழ்வ தரிததன்முன் குறுகுருங்கூற்ற, மென்றச்சத் துடன்ம
னமே மறவாமலறவழியி னேகுவாயே. (௫)

சிற்றுதா * போஷணைக்கா மலையேறிக் கடல்கடந்து
தேயமெல்லாஞ், சுற்றியனு தினமலைவாய் நித்யபேரின்பசுகந்
தோயவேண்டிச், சற்றுமுடல் வருந்தலின்றி யோரிடத்தே
தங்கிமூளும், பற்றினையே துறந்துசும்மா விருந்தாஞ்செய் வ
திலென்ன பாரநெஞ்சே. (௬)

சலமூறுஞ் சிறுநீரை விரைவினிறை யாவிடினக் கலந்தா
ன்மிக்க, சலமூறி யழுந்துமது போற்பவத்தை விரைவுற்றுத்
தள்ளிடாம, னிலமீதி யாம்வாளா விருப்போமேற் பாவங்க
ணிறைந்து மோக்க, நலநீங்கி நரகமெனும் போழி தனில்வீ
ழ்ந்து நலிவோ னெஞ்சே. (௭)

பெருவெள்ளஞ் சேர்ந்தபின்ன ரதைத்திருப்ப வொண்
ணுமோ பெருத்துநீண்ட, சருவின்கோ ணலைநிமிர்க்கத் தகு
மோபா வங்கலைநீ தள்ளிமேலாங், சருமமதின் முயலென்று
ற் பின்னையா கட்டுமென்றாய் கசடுவிஞ்சி, யொருமலைபோ
லாணபின்னெவ்வா றதைநீசாம்பருவத் தொழிப்பாய்நெஞ்சே.

---

* போஷணை - ஆதரிப்பு.

எதிலார் பொருணேர்கி யிச்சையுறல் கவர்ந்தொப்பா
மெழின்மின்னரைக், காகலாய் நோக்குதலே கலந்தொப்பாம்
பிறர்சேட்டைக் கருதலன்னர், வேதையுறக் கொன்றதொப்
பா மிவ்வாறோர் பயனின்றி மேவும்பாவ, மாதலினைம் பொறி
வழியே மனஞ்செலா தடக்குவா ரறிவுளோரே. (௯)

பூரியூர்வோன் றனைமறந்து புரிக்குபசா ரங்கண்மிகப் ப
ண்ணல்போலும், பெரியகட வுளைப்பணியா தாலயத்தை யல
ங்கரிக்கும் பித்தர்போலு, மரியபொருள் வெளியிட்டுச் செப்
பைக்காத் திடல்போலு மான்மாவுக்கே, யுரியவறம் புரியாம
லுடலைநீ யோம்புகின்று யுள்ளப்பேயே. (௰)

ஒருயிரீ ருடலென்ன நட்டமைந்தர் மாதர்நம துயிர்நீங்
கிற்றம், மாருயிரைத் துறப்பரோ வழுவதுந்தம் முணவுவைக்
க வமைந்தபாண்டம், பேருலகி லுடைந்ததென வழுவதன்றி
நமக்கிரங்கும் பேரிங்குண்டோ, சாருமிவர் நேயத்தாற் பவஞ்
செய்து வீடிழத்த றகுமோநெஞ்சே. (௧௧)

வேறு.

உளதிலையென்ன வுரைப்பதேவருத்த முண்மைகூ றிட
லெளிதாகுங், களவுகட்காமங் கொலைசெயல்வருதசங் காவ
லன் றண்டமூர்ப்பகையா, முளவதைவகுத்து மிகபாங்கெடு
க்கு முண்மையா வீதெலாமுன்னிற், களநிசர்பாவஞ் செய்த
லேகட்டங் கருதறஞ்செயலெளிதன்றே. (௧௨)

ஒருவனைப்புதிதாக் காணினுமவனே டுறவுசெய்யினுப
ணிகொளினும், பெருமையோன்றீய னெனவறியாமுன் பே
சிடார் தீயனேற்பெயர்வார், தருமநற்குணத்தைத் தீயரும்புக
ழ்வார் சழக்கினைச்சழக்கருமிகழ்வா, ரிருமைதீறறத்தின் பெ
ருமையுமறத்தி னிழிவுமீதுன்னுவாய் மனனே. (௧௩)

பள்கழல்வருட மாதர்களாடிப் பாடவோர் பகலெல்லா
மணிச்ச, மலரணைகிடத்தல் வருத்தமாமன்றே வார்த்தவெங்

நீர்பொருவுடல, மலசருசால நாசவெந்தழலாழ்ந் தயர்வுற
வொண்ணுமே வவியாப், புலவையேவிளைக்கும் பவத்தைவே
றறுத்துப் புண்ணியம்புரிந்திடாய் மனனே. (௧௪)

வேறு.

கூற்றியர்க்கஞ்சுவார்க்குச்சுதரிலைப்பயனென்றில்லைக்
காற்றினுக்கஞ்சாநின்றகலத்தினுக்கவிழ்தங்கைப்பென்
றேற்றிடவஞ்சினரோக்கியமில்லையின்னற்கஞ்சிற்
சாற்றருமறமுமில்லைத்தனிப்பாகதியுமின்றே. (௧௫)

இந்துமீன்பருதிபக்கியினவிளங்குகண்மரங்க
ளைந்துபூதங்களேனையாவுமோவாதெஞ்ஞான்றுந்
தந்தொழில்செய்துவாழுந்தனியரம்புரிதலென்னு
நந்தொழில்புரிகிலேம்யாநாய்த்தொழிலுடையநெஞ்சே. ()

௪௨-ம் அதிகாரம் அறஞ்செயல்
முற்றுப்பெற்றது.

ஆக அதிகாரம் ௪௨-க்குத் திருவிருத்தம்-௩௪௧.

43-ம், அதிகாரம்.

கணிகையரியல்பு.

பூவையிவட் களித்தநிதி கணக்கிலையோர் கடன்காரன்
புலிபோனம்மைச், சாவடிக்கே யிழுக்கமயிலேயிடர்தீ றென்
றிவடன்றுளில் வீழ்ந்தோம், பூவில்வைத்த நிதியையோர் கி
ழப்பூதங் காத்தினிய பூபாவுன்னைச், சிவபலியிடினீவே னெ
ன்றதென்று னென்செய்வா டெரிவைதானே. (௧)

நேரிழைநம் முடனிறப்ப னெனமுன்ன முரைசெய்தா
னிநபனம்மை, யீரவெனக் கொலைக்களத்திற் கிழுக்கவடி
பற்றிப்பின் னிரங்கிவந்த, காரிகையை நோக்கினே மிஞ்சிய
வோர் கோவணத்தைக் கருதிவந்தே, னேருயிர்நம் மிருவர்க்
குநீர்வீயி ஞனிறந்த தொக்குமென்றுன். (௨)

மனைதாவி முதல்வேசைக் கீந்துவெறுன்றமின்றி மய
ங்கும்வேளை, புனையவோரணியிலா திருத்தவில்லாள் கழுத்தி
னிலோர் பொட்டைக்கண்டு, மனமகிழ்வுற் றேதென்றேன்,
பாத்தையர்போ லெனக்குமருள் வாய்க்கவேண்டி, யினமாப்
பொட் டணிந்துக்கொண்டு தாசியா னேனென்ன வியம்பி
னளே. (௩)

ஆவியனையாளையோர் பொதுபிரிந்தவளில்ல மணுகுங்கா
லை, மேவுபாங் கியைக்கண்டாண் டுணையின்றிவருந்தினளோ
மின்னென்றே, னவிதனுக் குண்டோகாண் மயிர்பஞ்ச ம
லப்பஞ்ச நாய்க்குமுண்டோ, தேவிதனக் குண்டோவாண் ப
ஞ்சமென்று விதன்பொருளைத் தெரிகிலேனே. (௪)

செவ்வையுறு பொருள்கவர்ந்த பின்னரெனைக் கைவிட்
டதேனைநோக்கிக், கொவ்வைவாய் மயிலேயிச் சினயேதென்
றேன் வனசக்கோயின்மேவு, மவ்வையைமுன் சேர்ந்தபிழை
பொறுத்தவளை யென்னகத்துக் கழைத்தேனன்று, டவ்வை
யையு மருவினீ ரினிப்பொறே னென்றாடிச் சலங்கொண்
டாளே. (௫)

உண்ணுமலிரவலர்க்கு மீயாமற்பூமிதனி லொளித்தபொ
ன்னைக், கண்ணுறு டனக்கீயவேண்டியதைத் தோண்டுகின்ற
காலந்தன்னின், மண்ணுறு ளைனோக்கி யெனக்கீந்திடுபொ
ருளாயினி வாங்காநின்ற, பெண்ணுறு ளெனையுன்வாய் கொ
ட்டுவளென் றேநகைத்துப் பேசினளே. (௬)

முனைங்காலை வருடுமவள் காங்கோல்போன் முதுகின்மே
ன் மோதப்பூமே, லனங்கான மயிலென்ன நடஞ்செய்த சழன
ம்மே லாடித்தாக்கத், தினங்கான ரசமுதவு வாயேசி யுமிழவி
ந்தச் செய்கைகண்டு, மினங்காத லாயவளில் லேகுதியோ நீ
ன்றியோ வியம்பாய் நெஞ்சே. (௭)

ஆவலாலவகாலத் தவ்ளின்னான் புகச்சிலபே ரங்கிருந்து,
மேவியோ டினர்சினமுற் றிவராரென் றேன்மாமி விரைவாய்
வந்து, பூவையிவ ணின்பிரிவாற் றுதழப்பாங் கியர்க்குனைப்
போற் புருட.வேடந், தாவரவே தரித்தவட்குக் காட்டினன்
வே றன்றென்று சாதித்தாளே. (அ)

பொருளொன்று நாந்தந்த திவட்கதற்கில் லாமைபிணி
பொய்புறட்டு, மருளொன்றுங் கட்காமங் கொலைகளவு சூது
வசை மாணத்தோடு, மிருளொன்று நாகமின்னு மிவள்பானு
ங் கொண்டதற்கோ ரிலக்கமுண்டோ,தொருளொன்றுப் பா
ரிணம்போற் சமர்த்தாங்கொண் டெவர்வணிசஞ் செய்யவல்
லார். (கூ)

இரதியனை யார்பாற்போய் நாம்வருமுன் னெங்குசென்
று யெனவில்லாளைப், பொருதிவினவிடவிரதி விருடனையார்
பாற்போய்ப் புணர்ந்தேனென்றாள், விரதமுள்ளாயெங்கிதை
நீ கற்றதென்றே மும்மிடத்தும் விருப்பாயும்மைச், சூதஞ்
செய் பவரிடத்துங் கற்றதென்றாள் வேறினிநாஞ் சொல்வ
தென்னே. (ய)

சுவையுணவு தானிருக்க மலந்தேடி யோடுகின்ற சுணங்
கன்போலுங், குவையதனிற் கிடந்துநல் விடநீங்கித் திரிகின்
ற * கோகுபோலு, நவைதீர்தண் ணதிநீ ருந்தாதங் கண
நீரை நாடல்போலுஞ், சிவயனைய காந்தையவர வெறுத்தசட
ர் வேசையரைச் சேர்வார்மாதோ. (யக)

கோடுமுடன் மாமியெனை மதுவுடன் புலாறிருடிக் கொ
ணர்தியென்றாள், பாடுபெறும் பார்ப்பானு னென்றேன்மற்
றவையுண்ணப் பவம்போமென்று, ஞடும்வசை புயிருய்யே
னென்றேனீ மாய்ந்திடின்முன் னன்கொடுத்த, வோடுமற்ற
மருகர்க்கா நான்றக்கொள் ளெனக்கயிறொன்னுதவினளே.()

* கோகு-கழுதை.

பசையறவெம் மாவியன்றாள் கைப்பொருளெலாம்பறி
க்கப் பசியானன்கு, திசைமுகமு நோக்கலாற் றிசைமுகனு
னேம்வாயிற் றீயாளிட்ட, வசையான மண்ணுண்டு மாயனு
னேங்கையின் வாங்குமோட்டா, லிசைமேவுமீசனு னேம்பு
வின னமையொப்பா ரெவர்தாமம்மா. (கங)

விடமுண்டான் கூற்றுதைத்தா னலகைவென்றான் புர
மெரித்தான் விடையோனென்னக், கடலுலகிற் சைவரவன்
புகழ்விரிப்பார் கணிகையர்கட் கடுவையுண்டு, குடமுலையாங்
கூற்றுதைத்துத் தாய்க்கிழவி யெனும்பேயைக் கொன்றனனு
ர்வா, ழிடமென்னும் புரமெரித்தா னெனில்யாமு மவன்புக
ழை யியம்புவோமே. (கச)

கொடியாளன் பற்றபின்னர் பலர்நம்மால் வந்துன்னைக்
கூடிக்கொண்ட, மிடியென்றும் வாழ்கவென்று ரேனென்றே
முயிர்க்கினியாள் வீட்டினீவந், தடிவைத்த போதெல்லாங்
கூடைபுரி பாண்கட்டி லடியடுக்கு,நெடியசிறை யிருந்தோமச்
சிறையையுன்றன் வறுமைவந்து நீக்கிற்றென்றார். (கரு)

தெரிவையினட் பறிவான்மாண் டெனக்கிடந்தே மாமி
வந்த சிலரைநோக்கி, யுரியபாடையிலிவனை யெடுமென்றாள்
வீண்செலவே னுலந்தோர்காலிற், புரிவீக்கி யிழுமென்றன்
னம்பணித்தா ளதுசெய்யப் புகுந்தோர்தம்மைத்,தெரியாமலு
யிர்தப்பி யோடிவந்தோ மங்குறிலெஞ் சீவன்போமே. (கசா)

சாமியுனைப் பிரியேனென் றுரைத்துப்பின் னகன்ற
மின்னு டன்னைநோக்கித், தோமிலா நின்மாற்றந் திறம்பிய
தே தென்றேனீ தொகுப்பாற்றந்த, சாமியைநீங் கேனென்
றே துனைச்சொன்ன தன்றநீ சாமியானற், பூமியிலுன் மாற்
றென்ன விடையென்ன விலையென்ன புகல்வாயென்றாள்.()

ஒருவனுண்ட கலத்துண்ண வொருவனுடை யினையுடு
க்க வொருவன்றூங்கும், திருவமளி துயிலமனம்பொருந்தாது
பலரெச்சஞ் சேர்படிக்கம், பொருவுவே சியர்வாயெச்சிலையுண்

ணைப் பலபேரைப் புணர்ந்தசுத்த, முருவுகொண்டா லனை
யவர்தோள் சேர்வேயெவர்க்குமன மொன்றுங்கொல்லோ.()

பொருளின்சே டத்தையிவட் களித்தோம்வாய்ச் சேட
மெலும் பொருளளித்தா, டருமனைனத் தனமளித்தோ மெ
மக்கிவளுந் தருமனைத் தனமளித்தா, ளருவையாம் பலிய
ளித்தோ மிவளெமக்குப் பலியளித்தா ளாழிசூழ்ந்த, விருநில
த்தி னீதன்றியின்னுமிவ ளென்செய்வா ளெம்க்குத்தானே.

கொலைஞர்தமைக் கொலைசெய்து சன்வதைவெஞ் சிறை
யிலிட்டுக் குற்றஞ்செய்யும், புலைஞரைத்தண் டித்தடக்கு நம்
மிங்கி லீஷ்மன்னர் புருடராலிச், குலைவைக்குந் தன்மைய
ளாய்ப் பாதகமெலாந்திரண்டோ ருருவாய்வந்த, விலைமாதை
க் கொல்லாம லுலகத்திலேதுக்கா விடுத்தாரம்மா. (௨௰)

பணயமேதிரணமன்பு பெரிதென்ற பாவைபொருள் பறி
த்தபின்ன, ரணையேனென் றுளணங்க னுனக்கிலையோ வெ
ன்றேமவ்வறிவிலான்பூங், கணைகளையேவிடுத்தன னெஞ்சுவ
ணேகாண மெனுங் * கதிரங்கொண்டென், னிணைமுலைமே
றெறித்திடின்வெல் லானென்று ளிவண்மனம்நல் விருப்
போவம்மா. (௨௧)

வடிவுமிகு கொழுநர்தமை வேசியர்வவ்விடவருந்தும் வா
ட்கணல்லீர், கடினமனங் கணக்கிலா வாடவர்சம்போகமுயி
ர்க்கவர்தல்வஞ்சங், குடிகெடுக்குந் தொழிலுங்கட் கில்லையெ
னவெ[illegible]த்தனைக் குணங்களெல்லாம், படிவிலுமங் கமையுமே
ற் கணவர்திரு வருளுமக்கும் பலிக்குமன்றே. (௨௨)

பகருவங்கம் பசராக்குத் தாகுசெல்வாள் கண்முதற் ப
ணங்கூட்டின்றி, யகனிதம்பச் சரக்கொன்றைப் பலருக்குந்தி
னந்தினம்விற் றருப்பொன்வாங்கிப், புசலுமந்தச்சரக்குங்கை
நீங்காது வணிகஞ்செய் பொதுமின்னார்போற், சகமதனிற்பே
ரறிவினேடுவா ணிபஞ்செய்யும் சமர்த்தருண்டோ. (௨௩)

* கதிரம்-பாணம்.

கல்விசெய்தமாதென்னை விலைகேட்டாளுடனேக்கக் க
லந்துகாம, நலமுண்டவினக்குவிலை யேதென்றேன் சவமனை
ய நான்சுகிக்க, விலையென்றாள் பொய்யென்றேன் வள்ளுவர்
கூறியகுறளா மினிபநூலில், விலைமாதைச்சேர்தல்பிணந் த
ழுவியதை யொக்குமென்றார் வீணேயென்றாள். (௨௪)

தையவில்லம் புகும்போதென் சுதன்குரலைக் கேட்டொ
துங்கித் தாழ்வாரத்திற், பையவென்றிச் செவிகொடுத்தேன்
பாகினைப்பார்த்தகோதை பணமீயென்று, லையனிறந் திடி
லெல்லா முனதென்று னவன்றூங்கு சமையம்பார்த்தோர்
கையெடுத் தவன்றலைமேற் போடுவாய் போடுமுன்னான் ற
ழுவேனென்றாள். (௨௫)

ஒருமாது தன்றுணைவன் சீடனைமற் றொருமாதவ் வும்ப
ர்கோனை, யொருமாது சோதரரை வரைச்சேர்ந்து கன்னிய
ரொன் றுயர்பேர்கொண்டா, ரருமையா வெமைச்சேயர்சோத
ரர்சீ டரையிபம்பர்க் கரசைச்சேரும், பொருண்மாதக் கன்னி
யர்க் கெலாஞ்சிரோ மணியென்னப் புகலலாமே, (௨௬)

முதிமூதன்மூவரிலெவருன் கடவுளெனச்சிற்றிடையை
வினவப்பூவா, ழெதிரிற மணியமென்று ளரன்கோயிற் றுசி
யுனக்கியல்போவென்றே, னிதியுடன்மைந் தரைப்படைத்த
ன் றாலைதயென் காலில்வைத்து நிதமும்வீழ, மதிபடைத்து
த் தமனியப்பேர் தான்படைத்த விதிக்கணையார் மகிபவெ
ன்றாள். (௨௭)

அந்தமுள்ளா ளுரிமையா வத்தமுள்ளார்வாலியா வவன்பின்
றோன்றி, வந்தவனு ளுயினேன் மூலரிலோ ரரியரியின் மக
னையன்னுள், பந்தமுறச் செய்தனனம் மிருவரையார் சேர்த்
துவைப்பார் பாவாயென்றே, னைந்துலோகத்துளோ ரரிநமை
யோ ரரிசேர்க்கு மறிநீயென்றாள். (௨அ)

இனியாளை நோக்கியத்தை சக்கிரிக்குச் சொகுத்தா ளி
டுசாயென்றே, தொனிகேட்டுச் சினந்துநான் குயவனோவெ
னைமயக்கத் தாளோவென்றேன்,றனியாசாஞ் சக்கிரிநீயாகை

யினின் னடிமலர்தோய் தானமெல்லா, நனியேசொக்கெ
னுங்கனகப் பொடியிறையென் றேன்முனித னன்றேவெ
ன்றான். (௨௯)

எனையன்றி மற்றோரைச் சேர்ந்தறியே னென்றகன்னி
யிருதிங்கட்குட், டனையனீன்றாள் புதுமையென்றாள் புது
மையென்றே னினையும்மைதழுவியிச்சேய், சினையாயெண் ம
தியிலிரங் தேனிகத்து முனைப்புணரச்செய்தநேர்ன்பான், மு
னையல்கு லிருமாதநிறைதுடனிம் மகவீன்றேன் முதல்வவெ
ன்றாள். (௩௰)

சிலர்மயில்வீ டுற்றனரென் றறிந்துண். மையவங்கு செ
ல்லுங்காலை, புலனிழந்து நூறாண்டுங் கடந்தகூ னுடன்மாபி
பூபாமாரன், மலர்வாளி விடுத்தனன்சே ரனையென்னெரு
ங்கிவழிமறித்தாளப்பேய், கலவிதனக் கஞ்சிமீண் டோடினே
னவள் கதையைக் கண்டிலேனே. (௩௧)

கைத்தனநா மிழந்தபின் கூன்முடவ ரந்தகர்நோ யர்க
டைக்குலத்தர், நித்தமருவிடவுள்ள மூவந்தமின்னை நோக்கி
லது நெறியோவென்றே, மத்தமதிற் குருடனெஞ் சாதியிழிவு
ளதோவஃ தளிப்போர்மேலோ, ரித்தரையிலெனக்கியார் கீழ்
குலத்தர் சாதியிவை யிரண்டென்றாளே. (௩௨)

கனைகடன்மணலை யெண்ணினும்வேசியர்சே ராடவர்க்கோ
ர்கணிதமுண்டோ, வனையநீ ரளவிடினு மவருட்சொள் சுக்கி
லத்துக் கத்துண்டோவவ், வினையவர்மெய் யுரோமத்தையெ
ண்ணினுநோய்த் திரளெண்ண விதானமுண்டோ, யினைய
வரைச்சேர்தல்பெருந்தீயினிடை மூழ்குதலையேய்க்குமாதோ.

விலைமகட்கென் றயலகத்திற் கன்னமிட்டுத் துளைவழி
யுள் விட்டதாளைக், கொலைவாளாற் றறித்தனர்கூ கூவென்
றேன் வேசையென்பாற் குறுகியுக்கக், கலைசோதித்தொன்மி
லாச் சினத்தாலவ் வகத்தாரைக் கதறிக்கள்வன், றலைதுமியுந்
தாடுமித்தெ னென்றாள்வெ ருவியுடல் சாணுனேனே. (௩௪)

திருவெலாங் கொள்ளைகொண்டா டனைநோக்கிச் செல்
வதரத் தேனீயென்றேன், பெருவாயெச் சிலையுமிழ்ந்தாள்
பேசென்றேன் கொடுஞ்சொற்கள் பேசலுற்றாள், மருவென்
றே னுவதத்துக்கை யாலிடித்துக் கடித்தினிய மதனநூலா,
மிருபாத தாடனமா லிங்கனமெல் லிதழ்சுவைத்தா லென்றா
ளம்மா. (௩௫)

தரணியின்மிக் கெழின்மாதை யுனதுகுல தெய்வமெது
சாற்றென்றே, னிரணியனென் றெய்வமென்றாள் விட்டு
ணுவோர் நரசிம்ம மெனவேவந்தான், முரணுறவொண் ணு
தென்றே னிரணியா சுரனன்று முராரிமெய்மேற், கிரணவு
டை யெனப்புனைந்த விரணியனென் றெய்வமென்றாள் ரழு
யுன்னுளே. (௩௬)

பொய்யேந்து மனவேசைக் காத்திருடிக் கையிரண்டும்
போக்கிக்கொண்டே, மையேந்து விழிமனையாட் கிடையேந்
துந் துகிலின்றி மானந்தன்னைக், கையேந்து மிரக்கவோ கை
யிலாளாணு ளக்கையையேந்திச், செய்யேந்து மூலகத்திற்
பலியேந்தி யுண்ணுவமி யாஞ்செப்பாய் நெஞ்சே. (௩௭)

சேடிழையின் சேபியர்முன் னெமக்கிதஞ்செய் வான்பு
விலெவஞ் சினமாகோகு, நாயோரி காடியெனக் கத்திமகிழ் வி
ப்பர்நா நவிந்தபின்னத், தீயவிலங் கினச்செய்கை நங்கண்
ணே செயத்தொடுத்தார் திருவையொப்பா, ளாயமிருகங்கட்
கோராசாணு ளவட்கிரைநா மாயினோமே. (௩௮)

வண்ணமல ரமளியின்மே லிருக்கையிலோர் பரபுருடன்
வரவுநோக்கிப், பண்ணமரு மொழிமின்னாள் விளையாடல்
போற்றன்கைப் பதுமத்தாலென், கண்ணதனை மூடிவிட்டே
னெனநகைத்தாள் வேற்றாளார் கள்ளீயென்றேன், கண்ண
டிபோற் றிகழுமென்றன் கபோலமதி லுன்னுருவைக் கண்
டாயென்றாள். (௩௯)

இரவினிலென் னுடன்றுயின்ற கோதையடிக் கடிவெ
ளியே யேகிமீண்டாள், கரவறிவான் பின்றொடர்ந்தேன் கொ

ல்லையிலே காளையொடுங் கலந்துநின்று, ளரவமெனச் சிறிய
வ்வாண் மேல்வீழ்ந்து தாக்கவுயி ரற்றுவீழ்ந்த, வுருவையுற்று
ப் பார்க்கவென்ற னொருசேயென் றறிந்துநெஞ்ச முருகினே
னே. (௭௰)

௪௩-ம் அதிகாரம் கணிகையரியல்பு

முற்றுப்பெற்றது.

ஆக அதிகாரம் ௪௩-க்குத் திருவிருத்தம்-௪௨௧.

44-ம், அதிகாரம்.

விலங்கினத்துக்கிடர்செய்யாமை

விலங்கினங்கட்குவாக்கும்வினையுணர்ஞானத்தோடு
நலங்களுமிலையென்றுநூனரைப்போற்சீவன்மெய்யைப்
புலன்களுமின்பதுன்பம்புணர்ப்பறிநெஞ்சினோடுந்
துலங்கிடுவிலங்கைவாட்டித்துயர்செய்வோர்நரகத்தாழ்வார்.

மானிடர்துயரைச்சொல்வர்மற்றுளோரதனைத்தீர்ப்ப
ரானவருறுநோய்நீக்கவனந்தமாம்பரிகாரங்கண்
மோனமாயிடுக்கண்டாங்கிமுறையிடவறியாதல்லற்
றுனுறுவிலங்கைக்கொல்வோன்றருமனேபேயோவம்மா. (௨)

கொடியவெவ்விலங்கையெல்லாங்கோறலே முறையென்றுஞ்
மடிமைபோனராக்குழைத்திண்டயர்விலங்கினைமாசில்லாக்
குடிஞையையடித்துதைத்துக் கொன்றுண்போர்சமயம்வாய்க்
கிற், படியின்மாக்களையுமுண்பர்பழக்கம்போற்றீயதுண்டோ.

ஊமரைப்பித்துளாரையுணர்வில்சேயரைமின்னாரைப்
பாமரர்தம்மைமிக்கபரிவொடுங்காத்தல்போல
நாமறவிலங்கைக்காப்பர்நல்லவரதைவருத்துந்
தீமனமுடையோர்துன்பஞ்செய்வர்மானிடர்க்குமம்மா. (௪)

சாயிலைகிழங்கேதக்ககறியதாமதனையுண்போ
ராயுளுள்வளருமூழ்த்தலருந்தவோருயிர்கட்செல்லாந்
தாயெனுமொருசருத்தன்சாபத்தைப்பரிப்பாரென்னிற்
பேயினுங்கொடியவன்னார்பிழைக்குமாறெவன்சொலம்மா. ()

௪௪-ம் அதிகாரம் விலங்கினத்துக் கிடர்செய்யாமை

முற்றுப்பெற்றது.

ஆக அதிகாரம் ௪௪-க்குத் திருவிருத்தம்-௪௨௬.

45-ம், அதிகாரம்.

பன்னெறி.

தன்னைத்தானறிதல்.

தன்னைத்தன்குணத்தன்மையைத்தேரவே
யுன்னுகின்றவனோங்கியநட்பினோர்
நன்னயச்சொனம்பாமனள்ளார்தினம்
பன்னுமாற்றங்கணம்பிற்பயனரோ. (௧)

பெரியோரடக்கம்.

தேமலிசுவைக்கனிபலசெறிந்துயர்
காமரம்விளைதல்போற்கலையுணர்ந்திடும்
தாமனமாட்சியோர்தொழுவர்யாரையும்
பாமரரெவரையும்பணிந்திடார்களே. (௩)

இதுவுமது.

குன்மணிவெள்ளியுருதாழ்குரவையூடொளித்திருக்குஞ்
சலமிசையெவருங்காணச்சஞ்சரித்திடுந்துரும்பு
கலமெனமானம்பூண்டகலைவலோரடங்கிநிற்பர்
புலனில்சித்தையர்தமைத்தாம்புகழ்ந்தெங்குந்திரிவர்மாதோ.

உபசரித்தல்.

எதிர்சென்றுமுகமன்கூறியிருக்கையுநல்கியுண்டே
யதிசயமெனவினவியன்பொடுமுகமலர்ந்து

துதிபுரிந்துபசரிக்குந்தொழிலினாற்செலவொன்றில்லை
யதிர்கடலுலகுளோர்தமன்பெலாம்வரவாமாதோ. (௪)

பெரியோர்சாதற்கஞ்சாமை.

அறப்பெருங்கடலன்னான்றனடிமலர்காணவண்ண
மறைப்பதேயுடற்பாடாவாமரணத்தாலதனைபாரிர்
றறப்பவர்க்குடனேயத்தன்சொரூபமேதோன்றலாலிங்
கிறப்பதுபிறப்பினுந்தானினிதறவர்க்குமாதோ. (௫)

நம்பிமோசம்போகாமை.

அத்திருமூலகிற்சில்லோரகத்தொன்றும்வாக்கிலொன்றும்
வைத்திதஞ்சொல்லாலியாவும்வனச்செவியேற்பதன்றிச்
சத்தியமெனக்கொண்டேகல்சக்கினைமூடிநீண்ட
பித்திகையேறிச்செல்லும்பேதமைநிகர்க்குமாதோ. (௬)

பகைவர்க்குதவிசெய்தல்.

நள்ளுநர்தமக்குமென்றுநன்றெமக்கியற்றுவோர்க்கு
முள்ளுவந்தியற்றுகின்றவுதவிதானரியதன்று
* புள்ளுவமிழைக்காநின்றபொருந்தலர்க்காற்றினன்றி
விள்ளும்வீட்டின்பந்தன்னைவிளைக்கின்றவித்தநெஞ்சே. (௭)

உலோபர்பொருள்.

தமதெனவுலோபரீட்டுந்தனத்தினைக்கொடுங்கோன்மன்ன
ரமதெனவிருப்பர்கள்வரமதென்பர்கிளைஞரெல்லா
முமதெமதெனவாதிப்பருலகெனதென்னும்யாமு
ரமதென்போம்பாரந்தாங்கிநலிவதென்பிசினரம்மா. (௮)

நற்குணச்சிறப்பு.

விறலிகற்பதுவேகற்பகூனுடல் விருந்தைகற்பரிதன்று கலையெலா, மறவுணர்ந்தக் கோர்நொறிலே நொறி † லஞ்ஞ கொண்டவ டக்கங்கதழ்வன்று, திறிவினர் பொறையேபொ

* புள்ளுவம்-வஞ்சகம். † அஞ்ஞ - அறிவிலான்.

றைகொஞ்சமுந் திறமிலார் தம்பொறுமை தலையன்று, மற லுளார்கொடை யேகொடைசீரெலாம் வாய்த்தசெல்வர்கொ டைபெரிதன்றரோ. (௯)

கொடுஞ்சொற்கூறாமை.

உறுமைமின்னினைத்தன்பாற்கொண்டுதகமன்னுயிர்க்குநல்கு
ங், கருமுகிலெனக்கண்ணாலென்காணினுங்கேட்பினுஞ்சூழ்
பருவரலேதிலார்க்குப்பயக்கும்வன்சொல்லைநீத்து
மருவியநலங்கலந்தவசனமேபகர்வர்நல்லோர். (௰)

சமயமறிந்து பேசல்.

நதிமுதற்புகுவதெல்லாநன்ககட்டிடையடக்கு
ம்திர்க்டலெனவுமீயாருத்தமஞ்சிகையேபோலும்
வதிசெவிநுழைவதெல்லாமனத்தினுளடக்கித்தக்க
ததியறிந்துரைப்பதன்றிச்சகலர்க்குமுறையார்மிக்கோர். ()

மனோரம்மியம்.

பறவையும்விலங்குந்தீனிபசித்தபின்றேடுநாளைக்
குறையெனுங்கவலையில்லையுணவன்றியிறந்ததில்லை
வறியரெம்மிற்பலோரிவ்வையகத்துளர்தேவீந்த
சிறிதுமே பெரிதென் றெண்ணிச் சிந்தையேமகிழ்ந்துகொள்
ளே. (௧௨)

வேதாந்தம்.

ஈசனையே துதித்தலவன் றிருநாமத் தொடுதிருநா ளினைக் கொண்டாட, னேசமா னைதந்தை வணங்கல்கொலை செய்யாமை நிதங்காமத்தை, நாசமாக் குதல்களவு பொய்நீக் கல் பிறனில்பொ னயந்திடாமை, மாசறுமில் விதிபத்தும் வேதாந்த மெனக்கடவுள் வகுத்திட்டானல். (௧௩)

இதுவுமது.

முன்னவன்பொற்பதமுன்னமுன்னலுந்
தன்னுயிரெனப்பலவுயிரைத்தாங்கலும்

பன்னெறியாவினும்பளகிலாவரு
நன்னெறியாமெனநவிலும்வேதமே. (௧௪)

௬௫-ம் அதிகாரம் பன்னெறி

முற்றுப்பெற்றது.

ஆக அதிகாரம் ௬௫-க்குத் திருவிருத்தம்-௪௪௰.

வாழி.

ஆதிநூலென்றும்வாழ்கவநுதினம்தருமம்வாழ்க
வேதியர்நாளும்வாழ்கமெய்யடியார்கள்வாழ்க
நீதிலாங்கிலேயமன்னர்செங்கோலெஞ்ஞான்றும்வாழ்க
ஈதிநூல்படிப்போர்கேட்போர்சித்தமும்வாழ்கமாதோ.

முற்றுப்பெற்றது.

Udamalpet 3-8-912